தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

துணர் : 59 மலர் : 2

0

உள்ளுறை

1. **வழக்காட்சியில் ஓர் அருஞ்சொல்** 49

எஸ். சௌந்தரபாண்டியன், எம் ஏ. (தமிழ்)
எம். ஏ (ஆங்) பி. எட்., டிப். இன் வடமொழி
தமிழ்ப்புலவர்,
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
சென்னை-5.

2. **தொல்காப்பியரும் தேர்ப்படையும்** 52

அடிகளாசிரியன்
சுவடிப் புலம்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

3. **திருக்கோயில் ஆய்வுமுறை** 56

டாக்டர். ஏ. என். பெருமாள்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி,
சென்னை-600 113.

4. **பாவேந்தரின் குடும்பவிளக்கு விருந்தோம்பல்** 75

டாக்டர் இராம. சுப்பிரமணியன், எம். ஏ. பி. எல்.,
எம். லிப். எஸ்ஸி., பி. எச். டி,
7, தீத்தாரப்பமுதலி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.

5. **தொல்காப்பியமும் பழந்தமிழ் மொழி வரலாறும்** 83

டாக்டர். மோ. இசரயேல்
காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை-625 021.

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2016

துணர்: 59 குரோதன — வைகாசி மலர்: 2

மே — ஜூன் 1985

வழக்காட்சியில் ஓர் அருஞ்சொல்

எஸ். சௌந்தரபாண்டியன், எம். ஏ. (தமிழ்), எம். ஏ. (ஆங்)
பி. எட்., டிப். இன். வடமொழி

'கை' எனும் சொல்லுக்கு உடலுறுப்பாகிய கை (hand) என்பதைத் தவிர, பல்வேறு அரும்பொருள்கள் உள. இவற்றைக் காண இலக்கியங்கட்குக் கூடச் செல்லவேண்டாம்,

அன்றாட வழக்காறுகளிலேயே பேரின்பம் பயக்கும் இப் பொருள்வகைகள் அமைந்துகிடக்கின்றன.

'கை' என்ற சொல்லுக்கு '*வழி*' எனும் ஓர் அரும்பொருள் உளது. இதனைக் 'கைகாட்டி' என்ற வழக்காற்றால் உணரலாம். **கைகாட்டி** எனில் ***வழிகாட்டி*** என்று பொருள்.

இதேபோல, 'கை' என்ற சொல்லுக்கு, '***சிறு***' என்னும் பொருளும் உண்டு ; 'கைச் செலவு' எனும் ஆட்சியால் இதனை அறியலாம். இதற்குப் பொருள் கையினால் செய்யப்படும் செலவு என்பது அடாது. எத்தனை பெரும் தொகையாயினும்— எந்தச் செலவானாலும் கையால்தானே ஒருவன் செலவு செய்வான் ? ஆகவே **கைச்செலவு** எனும் ஆட்சிக்குச் ***சிறுசெலவு*** என்றே பொருள் பெறவேண்டும். இன்னும், 'கைப்பிள்ளை' என்பது சிறுபிள்ளையையும், 'கைம்மலை' என்பது சிறு மலையையும் 'கைப்பரிசு' என்பது சிறுதெப்பத்தையும் குறித்தலால், 'கை'க்குச் 'சிறு' என்னும் நுட்பப் பொருள் உள்ளமை தெளிவு. மேலும், 'கை' என்பதற்குச் 'சிறு' என்ற பொருளை 'கைக்காணி' (சிறு உரிமைப் பொருள்) என்பதிலும் காணலாம் ; இதுவே போலியாக, 'காணிக்கை' என்றாகி யுள்ளது.

'கை' ***பக்கத்தையும்*** குறிக்கும். துச்சர் பணியிடையே, 'அந்தக் கையை உயர்த்து' என்னும் போழ்து, 'அந்தப் பக்கந்தை உயர்த்து' என்பதே பொருளாதல் காணலாம்.

'கை' திறமையையும் சுட்டும். இவன் '**கைதேர்ந்தவன்**' எனில், ***திறமை வாய்ந்தவன்*** என்றே பொருள். அஃதாவது, திறமையில் தேர்ச்சியுடையவன் எனபது கருத்து. 'உன் கைவரிசையைக் காட்டாதே' என்றால், 'உன் திறமைத் திறத்தைக் காட்டாதே' என்பதே பொருளாதல் நோக்கலாம்

'கைவிட்டுப் போன பணம்' என்றால், கையை (hand) விட்டுப் போன பணம் என்பது பொருல்ல; 'தன்னைவிட்டுப் போன பணம்' என்றே பொருள். ஆகவே கை என்ற சொல், '**தன்**' என்னும் வேறொரு பொருளையும் உடைத்து. 'கைப் பொறுப்பு' என்பது '**தன்** பொறுப்பாகும்'. 'கைவசம் இல்லை' என்பது, 'தன்வசம் இல்லை' என்பதே ஆகும். 'கைப்பண்டம்' என்பது, கையில் உள்ள (on hand) பண்டம் என்பதாகாது; '**தன்னிடமுள்ள பண்டம்**' என்பதே ஆகும்.

'உடனடி' என்ற இன்னுமொரு தீம்பொருளையும் 'கை' என்ற சொல் கொண்டுள்ளது. 'கைமாற்றாக வாங்கிய பணம்' எனில், 'கை மூலமாக மாறிவந்த பணம்' எனப் பொருள் கூறல் சாலாது 'உடனடியாக மாற்றும் பணம்' என்பதே பொருள். சில காலம் கழித்துத் தராது வாங்கிய உடன், அதிகத் தாழ்ச்சி யின்றித் திருப்பித் தரும் – மாற்றித்தரும் பணமே கைமாற்றுப் பணம் ஆகும். 'கை கண்ட மருந்து' என்கிறோம். 'உடனடிப் பலன்தரும் மருந்து' என்பதே அதற்குப் பொருள். 'இப்போ கைவேலையா இருக்கேன்' என்றால், 'உடனடி வேலையாக-தற்போது புரியவேண்டிய வேலையாக-இருக்கிறேன்' என்றே பொருள். அது தவிர, கைகொண்டு செய்யும் வேலையில் இருக்கிறேன் என்ற பொருள் கூறல் இயலாது.

'நிலைமை கைமிஞ்சிப் போச்சு' எனுந் தொடரில், 'கை' 'வரம்பு' என்ற பொருளில் மின்னுவதைக் காணலாம் நிலைமை வரம்புமீறிப் போயிற்று, என்பதே இத்தொடரின் பொருளாம். 'நோய் கைமிகுந்து போச்சு' என்பதிலும், அதே பொருளினைக் காணலாம்.

'கை' என்பதற்கு 'அழுகைக் கூச்சல்' என்ற பிறிதொரு பொருளும் காணமுடிகிறது. 'குழந்தைகளைக் கையமர்த்த வேண்டும்' என்ற தொடர் காணலாம். குழந்தைகளைக் கத்தவிடாது, அழவிடாது இருக்கச்செய்ய வேண்டும் என்பது இங்குப் பொருளாகும்.

இவ்வாறு வழக்காட்சியில் 'கை' என்ற சொல் பல்பொருளிற் பயின்று வருதல் கழிபேருவகை தருவ தாகுமன்றோ?

கட்டுரையாளர்க்கு ....

தாங்கள் தமிழ்ப்பொழிலுக்கு அனுப்பும் ஆய்வுக்கட்டுரையை முழுநீளத் (Fool scap) தாளில், அடிக்குறிப்புகள் அவ்வப் பக்கத்தின் கீழ் அமையுமாறு தெளிவாகத் தட்டச்சுச் செய்து முதல் இரண் படிகளை அனுப்பியுதவுக.

தொல்காப்பியரும் தேர்ப்படையும்

திரு. அடிகளாசிரியன்

முன்னுரை :

தொல்காப்பியர் பொருளதிகாரம் புறத்திணையியலில் வெட்சித்திணை முதலாகப் பாடாண்டிணை யீறாக உள்ளவற்றின் துறைகளெல்லாம் முறையே கூறுகின்றார். கடைசி நூற்பாவில், இவையெல்லாம் புனைந்துரையல்ல உலகத்தில் நடந்துவருஞ் செய்திகளேயாகும் என்பதைக் கூறுகிறார். இக்கூற்றை விளக்கும் முகத்தான், இவையெல்லாம்

"ஞாலத்து வருஉம் நடக்கையது குறிப்பு" (30) ஆகும் என்றனர்.

எனவே, புறத்திணையியல் முதலானவற்றிற் கூறப் பட்டுள்ள செய்திகளெல்லாம் தொல்காப்பியர்க்கு முன்பும் அவர் காலத்திலும் உள்ளவை என்பதை வரலாற்றறிஞர் கருத்துள் வைத்துக் கொள்ளவேண்டும்.

தோற்றுவாய்

தொல்காப்பியர் புறத்திணையியலில் வெட்சி, வஞ்சி, உழிஞைத்திணைப் போர்களைக் கூறும்பொழுது போர்க்குரிய படைகளைப் 'படை' என்னும் பொதுப்பெயராலேயே குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், தும்பைத் திணைப் போரைக் கூறும்பொழுது மட்டும்,

"தானை யானை குதிரை யென்ற
நோனா ருட்கும் மூவகை நிலையும்" (புறத்-14)

என்ற நூற்பாப் பகுதியில் தானைப்படை, யானைப்படை, குதிரைப்படை யெனப் படைகளை மூன்று வகையாகவே கூறுகின்றார். தேர்ப்படையைக் கூறவில்லை. இதைப்பற்றி நாம் ஆராய வேண்டும்.

ஆராய்ச்சியாளர் கூற்று:

திரு சி. இலக்குவனார் தாம் எழுதியுள்ள *தொல்காப்பிய ஆராய்ச்சி* என்னும் நூலில் பக்கம் 223 இல் "தும்பைத்திணை பன்னிரண்டு துறைகளுடையது. பன்னிரண்டு துறை

களும் பண்டைத் தமிழகப்படை மறவரின் ஆண்மை மிகு வீரத்தை அழகுற விளக்குகின்றன. அக்காலத்தில் தேர்ப்படை இல்லை போலும்.

"தானை யானை குதிரை யென்ற
நோனா ருட்கும் மூவகை நிலையும்"

என்னுமிடத்தில் தேர் குறிப்பிடப்பட்டிலது. தேர் தானே இயங்காது குதிரையால் இழுக்கப்பட வேண்டியிருந்தமையான், குதிரைப்படையுள் அடக்கிவிட்டனர் எனக்கருத இடமுண்டு" என்பர்.

மேலே அவ்வாசிரியர், "அக்காலத்தில் தேர்ப்படை இல்லை போலும்" என்ற கருத்தினை ஐயமாகவும், அதன்பின், தேர் தானே இயங்காது குதிரையால் இயங்கலின் அதனைக் குதிரைப்படையுள் அடக்கிவிட்டனர்" என்ற கருத்தினைத் தேற்றமாகவும் எழுதியுள்ளார். இந்த இரண்டு கருத்தினையும் இனி ஆராய்வோம்.

தொல்காப்பியர் காலத்தில் தேர்ப்படையில்லை, தேர் ஊர்தியாக இருந்தது.

தொல்காப்பியர் பொருளியலில் களவு என்றும் கைகோளில் தலைமகன் தேரும் யானையும் குதிரையும் பிறவும் ஊர்ந்து இயங்குவான் (நூற்பா 17) என்று கூறுகிறார். இங்கே தேர் முதன்மையாகக் கூறப்பட்டிருக்கிறது. தனியாகக் குதிரையும் கூறப்பட்டிருக்கிறது. தேர்தானே இயங்காது குதிரையால்தான் இயங்கும் என்பனவற்றைத் தொல்காப்பியர் கருதியிருப்பின் தேரை ஊர்தியாக இங்கே குறிப்பிட்டிருக்கமாட்டார்.

அதனால் தொல்காப்பியர் காலத்தில் தேர் இருந்தது; அது அகப்பொருள் தலைவர்கட்கு ஊர்தியாகப் பயன்பட்டு வந்தது; போரில் ஒரு படைப்பிரிவாக இல்லை என்ற தொல்காப்பியர் கால உலக வழக்கத்தை நாம் கருதி உணர வேண்டும்.

வேறு செய்தி

"படையும் கொடியும் குடையும் முரசும்
நடைநவில் புரவியும் களிறும் **தேரும்**
தெரிவுகொள் செங்கோ லரசர் குரிய" (72)

என்றும்,

"வில்லும் வேலும் கழலுங் கண்ணியும்
தாரும் மாலையும் தேரும் மாவும்
மன்பெறு மரபின் ஏனோர்க்கும் உரிய" (89)

என்றும் வரும் *தொல்காப்பிய மரபியல்* நூற்பாக்களால் தேராகிய ஊர்தி அரசனுக்கும் அரசனைப் போலச் சிறந்தவர்க்கும் உரிமையுடைய ஊர்தியாகப் பயன்பட்டு வந்தமை புலனாம்.

வெற்றி விழாவில் தேர்

அரசன் தேரைப் போர் செய்வதற்குப் பயன்படுத்திய செய்தி தொல்காப்பியத்தால் அறிய முடியவில்லை என்றாலும் போர் முடிந்து வெற்றிவிழாக் கொண்டாட்டத்திற்கு (வாகைக்கு)ச் செல்லுங்காலத்தில் தனக்குச் சிறந்த ஊர்தியாகிய தேரின் மேலே ஏறிச் செல்வானாம். அப்பொழுது தேரின் மூன்னும் பின்னும் வீரரும் விறலியரும் குரவைக் கூத்தாடுவார்களாம்.

இந்நிகழ்ச்சியைத் தொல்காப்பியர் வாகைத் திணையில் மட்டும் முன்றேர்க்குரவை, பின்றேர்க்குரவை என்று பெயரிட்டுக் கூறுகிறார்.

தேரைப் படைக்குப் பயன்படுத்திய பிற்காலத்தே தும்பைத் திணையிலும் இத்துறைகள் கூறப்படலாயின. புறப்பொருள் வெண்பாமாலை போர்புரியச் செல்லும் தும்பைத்திணையிலும் வெற்றி கொண்டாடும் வாகைத் திணையிலும் முன்றேர்க் குரவை பின்றேர்க்குரவைகளைக் கூறுகின்றது.

தேர்ப்படையைப் பற்றிய செய்திகள்

பாரதப் போரில் தேர், யானை, குதிரை, காலாள் என்கின்ற நான்கு வகைப் படைகளும் இருந்தன. தேர்ப்படைகள் அதிரதர், மகாரதர், சமரதர், அர்த்தரதர் என நான்கு பிரிவாக இருந்துள்ளன.

கௌடில்யர் தம் பொருள் நூலில் காலாள், குதிரை, தேர், யானை என நால்வகைப் படைகளைக் குறிப்பிட்டு அவற்றுள் தேர்ப்படை இயங்கிப் போர் செய்வதற்குத் தகுதியான இடம் இன்னவாறு இருக்க வேண்டும் என்பதையும் கூறியுள்ளார்,

புறநானூற்றுப் பாடலொன்று (55)

"கடுஞ்சினத்த கொல்களிறும்
கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர் தேரும்
நெஞ்சுடைய புகன்மறவருமென
நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்"

என்று தேர்ப்படையுடன் நான்கு படைகள் இருந்த செய்தியை மிகத் தெளிவாகக் கூறுகின்றது.

பன்னிருபடலம் என்னும் இலக்கண நூலைப் பின்பற்றிய புறப்பொருள் வெண்பா மாலையும் தானை மறம், யானை மறம், குதிரை மறம், தேர் மறம் என்னும் நான்கு படைகளின் மறத்தைத் தும்பைத் திணையில் கூறுகின்றது.

பிங்கல நிகண்டும்

"யானை தேர்பரி காலாள் என்றிவை
நால்வகைத் தானை நாம மாகும்" (3 61) என்று நால்வகைப் படைகளைக் கூறுகின்றது.

தொல்காப்பியர் வாழ்ந்திருந்த காலப்பிரிவு

எனவே காலத்தை முறையே தேர் தோன்றாதிருந்த காலமென்றும், தேர் தோன்றி மன்னர் போன்றவர்க்கு ஊர்தியாக மட்டும் பயன்பட்டிருந்த காலமென்றும், பின்னர் தேர் போருக்கும் பயன்பட்டு வந்த காலமென்றும் மூன்று வகையாகப் பிரித்துணரின், தேர் ஊர்தியாகப் பயன்பட்டு வந்த காலமே தொல்காப்பியருடைய காலமாதல் வேண்டும். அக்காலம் பாரதம், புறநானூறு போன்றவற்றின் காலத்திற்கு முற்பட்ட காலமாதல் வேண்டுமென்க.

திருக்கோயில் ஆய்வுமுறை

டாக்டர் ஏ. என்.பெருமாள்

முன்னுரை

இறையிருப்பை உணரும் கருவிகளாய் அமையும் இடங்களையும் அரசனின் மனைகளையும் கோயில் என்ற சொல் சுட்டுகிறது. இறையிருப்பு உணர் கருவிகளைப் பிரித்துக் காட்டுவதற்காகத் திருக்கோயில் என்று சிறப்பு அடையுடன் தரப்பெற்றுள்ளது. கோயில் என்ற சொல்லுக்கு அரசன் மனை, இலிங்க சம்புடம், சிதம்பரம், சீரங்கம், தேவாலயம், விபூதிப்பை, கடவுளிருக்கும் இடம் வீரசைவர் அணியும் இலிங்க சம்புடம் என்ற எட்டு பொருட்கள் உள்ளன. இவற்றுள் பல இறையிருப்புத் தொடர்பானவை என்பது சிந்திப்பதற்கு உரியது. கோயில் என்றதும் நினைவுக்கு வருவது இறைவனை வழிபடும் இடம் என்பது குறிப்பிடத் தக்கது.

தமிழ்நாடு திருக்கோயில்கள் நிறைந்த இடமாகும். இங்குப் பல்வேறு சமயங்கள் இருந்தாலும் சைவமும் வைணவமும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன. இந்தச் சமயங்களைச் சேர்ந்த கோயில்கள் பல்லாயிரக் கணக்காகத் தமிழ் நாட்டில் காணப்படுகின்றன. சமய நிலையில் மாத்திரமன்றி கலை போன்ற பல்வேறு நிலைகளிலும் அவைகள் சிறப்பிடம் பெற்றுள்ளன. தமிழ்நாட்டில் கோயில்கள் பற்றிய ஆய்வு இன்னும் அரும்பிய நிலையில்தான் உள்ளது. மிக ஆழமாகப் பல நிலையில் ஆய்வு செய்யவேண்டிய சாதனங்களாகக் கோயில்கள் காணப்படுகின்றன.

பல்வேறு நம்பிக்கைகளையும் புனிதத் தன்மைகளையும் மனத்தில் கொண்டு ஆய்வதை விடவும் அறிவியலையும் சிந்தனை அறிவையும் சிறப்பாகக் கொண்டு கோயில்களை ஆராய வேண்டியது தேவையாகும். சமய உணர்வைச் சிறப்பாகவும் உறுதியாகவும் உணர்த்துவதற்கு உரிய இடமாகக் கோயில் அமைந்தாலும் சீரிய சிந்தனைக்குச் சிறந்த முறையில் அறிவாக்கக்கருத்துக்களை அள்ளித் தரும் அருங்கலைக் கூடங்களாகவும் வரலாற்று உண்மைகள் கனிந்து உருகும் கால உணர்வு ஊற்றுக் கண்களாகவும் சமுதாயச் சிந்தனைகளை வழங்கும் சமூக அறிவுக் களங்களாகவும் அவை காணப்படுகின்றன.

உலகியலையும் வாழ்வியலையும் உள்ளத்தில் கருதிக் கோயில்கள் பற்றிய ஆய்வினை மேற்கொள்வது மிகவும்

பயனுடையதாக அமையும். சமய நூல்கள் உணர்த்தும் கருத்துக்களை விடவும் கோயில்கள் உதிர்க்கும் உன்னதக் கருத்துக்கள் மிகப் பலவாக உள்ளன. கோயில் பற்றிய ஆய்வினை எவ்வாறு பகுத்துக் கொள்ளலாம் என்று எண்ணத் தூண்டலின் விளைவைக் காண முயலலாம்.

கோயில் அறிமுகம்

முதன் முதலில் 'கோயில்' என்ற சொல்லை ஆராய்ந்து பார்ப்பது நலம். கோ இல் எனப் பிரிப்பதாயின் அரசனின் இல்லம் என்ற பொருள் தரும் கோவில் உருவாகும். 'கோ' என்ற ஓரெழுத்து ஒரு மொழிக்கு அம்பு, அரசன், வானம், ஆண்மகன், எருது, கண், சந்திரன், சூரியன், திசை, தேவர் உலகம், நீர், பசு, பூமி, தாய், மேன்மை, தகப்பன், தலைமை, மலை, இரசம், சுவர்க்கம், இரங்கல், ஒழுங்காக்கு முதலிய 44 பொருள்கள் இருப்பதாக அறிய முடிகிறது. ஆனால் இறைவன் என்ற பொருள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும், கோவில் என்ற சொல் இறைவனின் இருப்பிடத்தைச் சுட்டுகின்றது. இலக்கியங்கள் பண்டைக் காலத்திலிருந்து இந்தப் பொருளைக் கைக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக இந்து சமயம் இச் சொல்லுக்குச் சிறப்பிடம் கொடுத்தாலும் பிற சமயங்களும் பயன்படுத்துகின்றன. ஆகையினால் இறையிருப்பைக் குறிப்பிடும் பொதுச் சொல்லாகக் கோயிலைக் கருதுவது தவறில்லை.

வழிபாட்டு உணர்வு, வழிபாட்டிடம் தெரிந்து எடுத்தல், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றைப் பற்றி நன்கு சிந்திக்க வேண்டும். மனிதனின் இயல்பான உணர்வுப் போக்கில் வழிபாட்டு உணர்வு எவ்வாறு தோன்றி இருக்கும் என்பதை உளநூல் அடிப்படையில் காண்பது முறை. அத்தகைய உணர்வுக்கு வாய்ப்பாக உதவும் முறையில் வழிபாட்டு இடத்தை எவ்வாறு மனிதன் தெரிந்தெடுத்திருப்பான் என்பதையும் வழிபடும் முறைகளை எவ்வாறு அமைத்திருப்பான் என்பதையும் நன்கு அறியவேண்டும். இவற்றைப் பற்றிய ஆய்வு முடிவுகள் கோயில்களின் தொடக்கத்தைத் தெரிந்துகொள்ளப் பெரிதும் உதவும்.

கோயில் வரலாறு

மனிதனுக்கு இறையுணர்வு தோன்றிய காலம் தொட்டு ஏதோ ஒரு முறையில் அவன் இறைவழிபாடு செய்திருக்க வேண்டும். அத்தகைய வழிபாடுகள் செய்த இடங்களைத்

திருக்கோவில்களின் தொடக்கமாகக் கருதலாம். தமிழ் நாட்டின் கோயில்களின் வரலாற்றை முறையாகவும் விளக்க மாகவும் அறிய இலக்கியக் குறிப்புகள் மிக உதவும் என்பது உண்மை.

சக்கப் பாடல்களில் 'கோயில்' என்ற சொல் பெருநராற்றுப் படை (வரி 90), நெடுநல்வாடை (100), பட்டினப்பாடலை (50,286),கலித்தொகை(94-39),புறநானூறு(67-10, 127-6, 241-3, 378-5), ஆகியவற்றில் வந்துள்ளது. பரிபாடல் திரட்டில் (8-4) ஓரிடத்திலும், சிலப்பதிகாரத்தில் (3-118, 5-169-173, 13-127, 137, 138, 14-7, 12, 16-139, 17-1-5, 18-25, 19 75, 20-46, 47, 22-10, 14, 23 107, 27-17, 157, 28-83, 29-1-35, 29-10-1)பலஇடங் களிலும் மணிமேகலையில் (5-118, 7-64, 20-5, 96, 22 12, 12, 23-38, 28-214) எட்டு இடங்களிலும் 'கோயில்' என்ற சொல் எவ்வாறு பயன்படுத்தப் பட்டுள்ளது என்பதை அறிய வேண்டும்.

சங்க இலக்கியங்களில், கோயில் பெரும்பாலும் அரண்மனையைக் குறிப்பிடுகிறது. பட்டினப் பாலையில் 'திருக்கோயில்' (286) என்பது சோழமன்னன் உறையூரை விரிவுறச் செய்து திருக்கோயில்களுடன் குடிமக்களைக் குடியமரச் செய்த சூழ்நிலையைக் காட்டுகிறது. இறையிருப் பாகிய திருக்கோயிலுக்கு மக்கள் இருப்பில் எவ்வளவு சிறப்பான இடத்தை அரசன் கொடுத்திருக்கிறான் என்பதனை இது காட்டுகிறது. சமூகத்தில் கோயில்களுக்குத் தரப்பெற்றுள்ள மதிப்பு இதனால் விளங்கும்.

சிலப்பதிகாரத்தில் 'பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்' (5—169), முருகன் கோயில், பலதேவன் கோயில், திருமால் கோயில், இந்திரன் கோயில் ஆகியவை பற்றிய செய்தியும், 'வேறு வேறு கடவுளர் சாறு சிறந்தொருபால்' (5—178) என்பதன் வாயிலாக பல கடவுளருக்கு வேறு வேறு இடங்களில் திருவிழாக்கள் நடைபெற்ற செய்தியும் தரப்படு கின்றன. வேட்டுவ வரியில் கொற்றவைக்குக் கோயிலும் விழாவும் சிறப்பாக எடுக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

'அருந்தெறற் கடவுள் அகன்பெருங் கோயிலும்,
பெரும்பெயர் மன்னன் பேரிசைக் கோயிலும்'
(13-137, 138)

என்ற பாடலடிகள் திருக்கோயிலையும் மன்னவன் மனையையும் பிரித்துக் காட்டுவதைப் பார்க்கலாம்.

மணிமேகலை பல இடங்களில் அரண்மனையைக் கோயில் என்று குறிப்பிட்டாலும்,

'பொருள்புரி நெஞ்சிற் புலவோன் கோயில்' (20-5)

என்று கூறுமிடத்தில் புத்தக் கோயிலைக் குறிப்பிடுகிறது. சங்க காலத்திலும் அதனைச் சார்ந்த காலத்திலும் திருக்கோயில்கள் தமிழ்நாட்டில் பலவாக இருந்துள்ளன. மக்கள் அவற்றைப் புனிதமாகக் கருதி வழிபாடு நடத்தியுள்ளனர். மன்னனின் ஆதரவும் கோயில்களுக்கு இருந்துள்ளது. பல தெய்வங்களைப் பல்வேறு முறைகளில் வழிபட்டு விழாக்கள் நடத்தி மக்கள் மகிழ்ந்துள்ளனர். ஆனால் அக்காலத்தில் கோயில்களை எவ்வாறு அமைத்து வழிபட்டனர் என்பதை அறிய முடிய வில்லை.கோயில்கள் அழிந்து விட்டமையால் பரந்த வெளிகளில் பீடமாக அமைந்திருக்கலாம் என்றோ அல்லது மண்ணால் கட்டப்பட்டிருக்கலாம் என்றோ கருதுவதற்கு இடமுள்ளது. செங்கற்களால் கட்டப்பெற்ற கோயில்கள் சில இடங்களில் காணப்படுகின்றன.

பிற்கால இலக்கியங்கள் கோயில்கள் பற்றிய செய்திகளை மிகுதியாகத் தருகின்றன. பல்லவர் காலத்தில் பாறைகளைக் குடைந்து செய்யப்பட்ட குடைவரைக் கோயில்களும் கற்களை அடுக்கிக் கட்டப்பட்ட கற்றளிகளும் முதன்முதலில் எழுப்பப் பெற்றதாக அறிய முடிகிறது. கோயில்கள் அக்காலத்திலிருந்து அளவிலும் அழகிலும் வளர்ந்தன. கலை அமைப்பு சிறந்து விளங்கின. இத்தகைய உயர் நிலையைப் பல்லவர் காலம், சோழர் காலம், பாண்டியர் காலம், விஜயநகரக் காலம், நாயக்கர் காலம் என்று பலவாறு பிரித்து ஆராயலாம்.

தமிழ்நாட்டுக் கோயில் கலையுடன் இராஷ்டிரகூடர், காகத்தியர், தெலுங்கு சோடர், ஹொய்சாலர், விஜயநகர் முதலியோரின் கலைத் தாக்கம் எத்தகைய மாற்றங்களைக் கொண்டு வந்தன என்பதைச் சிந்திக்கலாம். கல்வெட்டுகளைக் கொண்டு கோயில் வரலாற்றை அறிவது சிறந்த பயனைத் தரும். செவிவழிக் கதைகள், தலபுராணங்கள் ஆகியவை கோயில் வரலாற்றை அறிய ஓரளவு துணைபுரியும். இவ்வாறு பலமுறைகளில் திருக்கோயில் வளர்ச்சி வரலாற்றைக்கண்டறிய முயலுவது முறையாகும். தக்க சான்றுகள் இன்றி முற்ற முடிந்த முடிவுகளைக் கூற இயலாது. மரபுவழிக்கதைகள் மயக்கக் கருத்துகளுக்கு இடம் தந்து விடாதவாறு அறிவியல் சிந்தனையால் காத்துக் கொள்ளவேண்டும்.

ஆய்வுப்பகுப்பு

திருக்கோயில் ஆய்வை எவ்வாறு அமைக்க வேண்டும் என்பது சிறிது சிக்கலைத் தருவதாகவே காணப்படும். ஆன்மீகம், அறிவியல், சமூகவியல், போன்ற பலவற்றின் கூட்டியல்களாகக் கோயிலைக் கருதலாம். இதன் கூறுகள் அறிவிற்கு அப்பாற்பட்டும், அறிவிற்கு அடங்கியும் வேறு வேறு விதமாக அமைவதினால் ஆய்வுப் பகுப்பு சிக்கலுக்கு உரியதாகத் தோன்றலாம். இருப்பினும் மனித அறிவுக்கு எட்டும் அளவில் ஆய்வுப் பொருளைப் பகுத்துக் கொள்வது முறையாகும். முடியா முடிவுக்கு வழியாகும் சிக்கல்களை ஆய்வுப் பொருளாக ஏற்றுக் கொள்வதைத் தவிர்ப்பது தவறாகாது. அறிவியல் நோக்கையும் போக்கையும் ஏற்றுக்கொள்வதையே சிறந்த ஆய்வாகக் கருதவேண்டும்.

கோயில் ஆய்வை சமயம், வரலாறு, சமுதாயம், கலை என நான்கு பெரும் தலைப்புக்களாகப் பகுத்துச் சிறப்பான கருத்துக்களைக் கண்டு உணர முயலலாம். பகுப்பை வேறு வகையாக அமைக்கக் கூடாது என்பது இல்லை. பகுப்பு முறை பொருத்தமாகவும் தொடர்புடைய அனைத்துப் பொருள் களையும் உள்ளடக்கும் தன்மையுடையதாகவும் இருக்க வேண்டும். பகுத்துக் கொண்ட தலைப்புக்களைத் தனித் தனியாக எடுத்து அவற்றை ஆய்வுக்கு உட்படுத்தி முடிவுகள் காண முயல்வது முறை. தக்க சான்றுகளும் தகுந்த விளக்கங் களும் தேவை கருதி தருவது நல்ல ஆய்வாக அமையும். தேவையற்றவற்றை இடை நுழைப்பது மிகையாக மாறி ஆய்வின் சிறப்பைக் குறைத்துவிடும்.

சமயச் சிந்தனைகள்

சமயக் கொள்கைகள் பற்றிய காழ்ப்பற்ற முறையில் இப் பகுதி ஆய்வு அமைதல் வேண்டும். பல்வேறு கொள்கைகள் கொண்ட சமயங்களைச் சார்ந்த கோயில்கள் பலவாக உள்ளதை மனத்தில் கொண்டு அவற்றுக்குத் தக்கவாறு சிந்திப்பது முறையாகும். கோயில் என்பதற்குச் சிறப்புப் பொருளாகச் சிதம்பரம், சீரங்கம் ஆகியவற்றைத் தந்துள்ளது குறிப்பிடத் தக்கது. அவை முறையே சைவம், வைணவம் ஆகிய தத்துவங்களுக்கு உறைவிடமான கோயில்களைக் குறிப்பிடுகின்றன. சமயக் கொள்கைகள் மாறினாலும்

கோயில் என்பது பொதுவான ஒன்றாக உள்ளது. ஒவ்வொரு கோயிலிலும் எத்தகைய சமயக் கொள்கைகள் அமைந்துள்ளன என்பதையே சிந்திக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் இந்து சமயக் கோயில்களே சிறப்பிடம் பெற்றுள்ளன. அவற்றுள் சைவக் கொள்கையுடைய கோயில்களும் வைணவக் கொள்கை உடைய கோயில்களும் மிகச் சிறப்புடன் காணப்படுகின்றன. சைவத்தின் உட்பிரிவுகளாக முருக தத்துவம், கணபதி தத்துவம், சக்தி தத்துவம் போன்றவற்றைக் கருதலாம். கொள்கை வேறுபாட்டுக்குத் தக்கவாறு வழிபாட்டு முறை, விழா எடுக்கும் முறை, கோயில் அமைப்பு முறை, படையல் செய்யும் முறை ஆகியவை மாறுபடும். சமயக் கொள்கைகளை நன்கு அறிந்து கோயில் நடைமுறைகளுடன் பொருத்திப் பார்த்து அறிவாக்க உண்மைகளைக் காண முயல வேண்டும். ஒரே கொள்கையைக் கொண்ட இரண்டு கோயில்களில் நடைமுறை வேறுபாடுகள் இருப்பதைக் காணலாம். அவற்றின் காரணம் என்ன என்பதை ஆராய்வது நல்ல பயனைத் தரும்.

பொதுவாகச் சைவக் கோயில்களில் 27 ஆகம முறைகளில் பூசனை நடைபெறுகின்றன. வைணவக் கோயில்களில் பாஞ்சராத்ரம், வைகாநசம் ஆகிய ஆகம முறைகள் கையாளப் படுகின்றன. சித்த ஆகம முறைப்படி மயிலாப்பூர் போன்ற சிவன் கோயில்களில் பூசனை நடத்தப்படுகின்றது. இவ்வாறு மாற்றமுடன் வழிபாடு நடைபெறுவதின் காரணங்கள் ஆராய வேண்டிய ஒன்றாகும். பல கோயில்களில் வைதீக முறையிலும் காஞ்சி காமாட்சி அம்மன் கோயில் போன்றவற்றில் சாஸ்திரிகள் பூசனையும் நடத்தப்படுவது ஏன் என்று சிந்திக்க வேண்டியதாகும். சோடச உபசாரம் அல்லது 16 வகைப் பூசனை முறைகளை விளக்கி ஆராய்வது தக்கதாகும்.

அஷ்டோத்திரம் அல்லது 108 நாமாவளி, திரிசதி அல்லது 300 நாமாவளி, சகஸ்ரநாமம் அல்லது 1000 போற்றி முதலிய கூற்றுவழி வணக்க முறைகளைக் காரணத்துடன் விளக்க முயலலாம். கோயில்களில் குறிப்பிட்ட சமயநூல் விளக்கம் தருவதைக் காணலாம். எடுத்துக்காட்டாகக் குருவாயூரில் பாகவதபாராயணமும், ஆழ்வார் திருநகரியில் நாலாயிர திவ்விய பிரபந்த விளக்கமும் ஆண்டுதோறும் நடைபெறுகின்றன. இவ்வாறு நடத்தப்படுவதினால் ஏற்படும் பயன்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

கோயில்களில் பலவிதமான ஆராதனை முறைகள் கையாளப்படுகின்றன. அவற்றுள் முக்கியமாகத் தீப ஆராதனையைக் கருதலாம். தீபத்தட்டுக்கள் நந்தி, பாம்பு போன்ற பல உருவங்களைத் தாங்கியுள்ளன. தீபக் கண்களில் எண்களும் வேறுபட்டுள்ளன. தீபம் காட்டும் முறைகளும் வேறுபடுகின்றன. இவ்வாறு நடைபெறும் ஆராதனை முறைகளைப் பற்றி விரிவாகவும் ஆழமாகவும் சிந்தித்து அவற்றில் அடங்கியுள்ள தத்துவப் பொருளைக் கண்டு உணர்வது நலம்.

பொதுவாகப் படையல் பொருள்கள் ஒத்துக் காணப் பட்டாலும் சில கோயில்களில் குறிப்பிட்ட பொருள்கள் சிறப்பாகப் படைக்கப்படுவதின் நோக்கத்தை அறியலாம். பழனியில் பஞ்சாமிர்தம், திருப்பதியில் லட்டு, சிவகாசி காச்சக்கார அம்மன் கோவிலில் மிளகு ரசம், வைத்தீஸ்வரன் கோயிலில் மண் உருண்டை போன்றவற்றைப் பற்றிச் சிந்திக்கலாம். சில கோயில்களின் படையல் பொருள்களை மருந்துகளாக மக்கள் மதிப்பதைக் காணலாம். ஆழ்வார் திருநகரியில் தரப்படும் அரவணை, உட்காரை முதலியவற்றைத் தீராத வயிற்றுக் கடுப்பைத் தீர்க்கும் மருந்தாகக் கருதுகிறார்கள். இத்தகைய நம்பிக்கையின் அடிப்படையை அறிய முயலலாம் மழையற்ற காலங்களில் சிறப்புப் பூசனைகளும் நந்திக்கு மிளகு அல்லது நீர் முழுக்காட்டுவதில் அடங்கியிருக்கும் தத்துவத்தையும் அறிவியல் பொருத்தத்தையும் சிந்திக்கலாம்.

சிவன் கோயில்களில் அமாவாசை, பூர்ணமை ஆகியவற்றுக்கு முந்திய நாள் நந்தியின் வாயிலாக இறையருளைப் பெறுவதற்காக நடத்தப்படும் பிரதோஷ விழா, நிமித்தம் காரணமாக ஏற்படும் மார்கழித் திருவாதிரை விழா, பெருமாள் கோயில் தாயாருக்கு நடத்தப்படும் ஆடிப்பூரம் விழா, முருகன் கோயில் கந்தசஷ்டி விழா, பிள்ளையார் கோயில் சதுர்த்திவிழா, அம்மன் கோயில் பங்குனி உத்திர விழா, பிரமோத்சவ விழாக்கள் போன்றவற்றைத் தத்துவ அடிப்படையில் ஆராய்வது நலம். தினப் பூசனை முறையிலுள்ள மாற்றங்களையும், நடப்புகளையும் அறியமுயலலாம். இத்தகைய விழாக்களின் நோக்கங்களைத் தெரிந்து நடைமுறைப் பொருத்தங்கள் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

தனிப்பட்ட கோயில்களில் பல விழாக்கள் நடத்தப் படுவதைப் பார்க்கலாம். ஆழ்வார் திருநகரில் சித்திரையில் பெருமாளுக்குப் பிரம்ம உத்சவமும், வைகாசியில் ஆழ்வாருக்குப்

பிரம்ம உத்சவமும், ஆடியில் கருடாழ்வாருக்குப் பத்துநாள் உத்சவமும், ஆவணியில் திருபவித்ர உத்சவமும், புரட்டாசியில் நவராத்திரி உத்சவமும், ஐப்பசியில் ஊஞ்சல் உத்சவமும், மார்கழியில் திருஅத்யன உத்சவமும், மாசியில் தெப்ப உத்சவமும், பங்குனியில் தாயார் உத்சவமும் நடைபெறுகின்றன. இவ்வாறு வெவ்வேறு விதமாகப் பல கோயில்களில் விழாக்கள் நடக்கின்றன. அவற்றை நன்கு அறிந்து அவற்றுள் அடங்கிக் கிடக்கும் தத்துவ உள்ளீட்டை வெளிப்படுத்த வேண்டும்.

கோயில்களுக்குத் தலவிருட்சம் இருப்பதைக் காணலாம். பாதிரி (திருப்பாதிரிப்புலியூர்), தில்லை (சிதம்பரம்), ஆல் (திருவாலங்காடு), வேணு அல்லது மூங்கில் (திருநெல்வேலி), புன்னை (மயிலாப்பூர்), உறங்காப்புளி (ஆழ்வார் திருநகரி), பலா (திருக்குற்றாலம்) என்று பல மரங்கள் கோயில்களுடன் தொடர்புற்று விளங்குவதன் காரணத்தை அறிய வேண்டும். இதற்குள் வரலாறு, தத்துவம், அறிவியல் உண்மைகள் அடங்கி இருப்பதைக் கண்டுணர்ந்து கூறுவது முறை.

கோயில் அமைப்பு, சிலை அமைப்பு போன்ற பலவற்றை மனித வாழ்வுடன் தொடர்பு கொண்ட சமய-தத்துவ சிந்தனைகள் அடங்கி இருப்பதைக் காண முயலவேண்டும். கோயில்களையும் சிலைகளையும் ஆகமம் அல்லது தத்துவ அடிப்படையில் அமைந்துள்ளனர். இரண்டு அடிப்படைக்கும் உள்ள வேறுபாடுகளைத் தெரிந்து நுட்பமாக மேலாய்வு செய்வது முறை. பொதுவாகக் கோயில்கள் கருவறை, கொடிமரம், கோபுரம், பலிபீடம், நந்தி போன்ற வாகனங்கள் என்ற ஒழுங்கில் இருப்பதைக் காணலாம். இவ்வமைப்பில் ஆழமான தத்துவம் அடங்கியுள்ளது. உருவுடன் இதைப் பொருத்திக் காண்பது ஒரு நிலை. ஓர் உயிர் தன்னுடைய ஆணவத்தைப் போக்கிய பின்னர் இறைவனை நோக்கிச் சென்று அவனுடைய அருளைப்பெறுவது இன்னொரு நிலை. தொல்காப்பியர் கூறியுள்ள கொடிநிலை, கந்தழி, வள்ளி ஆகியவற்றைக் கோவில் அமைப்புடன் பொருத்திக் கண்டு சில உண்மைகளைக் கண்டுணர முயலலாம்.

கோயில்களில் மரபுவழியாகப் பின்பற்றப்படும் முறைகள், நம்பிக்கைகள், நடைமுறை வழக்கங்கள், சார்புடைய கதைகள் ஆகியவற்றையும் ஆய்வுச் சிந்தனைக்கு உட்படுத்த வேண்டும். கன்னியாகுமரி அம்மனைப் பற்றி எட்டு கதைகளும் சுசீந்திரத்தைப் பற்றி ஒரு கதையும் தத்துவ விளக்கங்களாக

இருப்பதைப் பார்க்கலாம். அவற்றுள் வரலாற்று உண்மைகளும் அடங்கிக் கிடக்கும்.

சமய உணர்வைச் சரியான முறையில் மக்களுக்கு உணர்த்தி உய்வழி வகுக்கும் உன்னத சாதனமாகக் கோயில்கள் எழுப்பப் பட்டுள்ளன. இந்த அடிப்படை நோக்கத்தைப் பலவழிகளில் நிறைவேற்ற அவை முயல்வதை நன்கு சிந்தித்துக் காண வேண்டும். வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் சமயக் கொள்கைகள் புலப்படுத்தப்படுத்துவதை நன்றாக அறிந்து கூறுதல் வேண்டும். காலக் கடப்பால் ஏற்பட்ட சமூக மாற்றமும் சிந்தனை வளர்ச்சியும் சில கொள்கைக் குறியீடுகளைத் தவறாகக் கருத இடம் வகுத்திருக்கலாம். அவற்றை அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்திச் சீர்மை சிதையாதவாறும் சிந்திக்க வேண்டும். மனித வாழ்வின் ஈடேற்றம் கருதிய சிந்தனைக்குச் சிறப்பிடம் கொடுப்பதே முறையாகும்.

வரலாற்று உண்மைகள்

உணமை நிகழ்ச்சிகளைக் கொண்ட வரலாற்றுக்குத் தக்க சான்றுகளை வழங்கும் அறிவுநிலைக் கூடங்களாகக்கோயில்கள் விளங்குகின்றன. கோயில்கள் மன்னர், சமய ஆர்வலர், வள்ளல்கள், மக்கள் ஆகியோரின் தொடர்புகளைப் பறை சாற்றும் நிலையங்கள் ஆகும். முதலாம் இராஜராஜனைப் பற்றிய செய்திகளுக்குத் தஞ்சைப் பெரிய கோயில் சான்று பகரும். பல்லவ மன்னர்களைப் பற்றி மாமல்லபுரம் கோயில்கள் விளக்கம் தரும். சோழர் பாண்டியர், ஹொய்சாலர், காகத்தியர், விஜநகரமன்னர், தெலுங்குச் சோடர், காடவராயர், சம்புவராயர் போன்ற பலரைப் பற்றிய வரலாற்று உண்மைகளைக் காஞ்சீபுரம் கோயில்கள் வாயிலாக நன்கு அறியலாம். மாங்கரை அம்மன் கோயில் பன்னிரண்டாம் செட்டியார் வரலாற்றை விளக்கும் தரமுடையது. இவ்வாறு ஒவ்வொரு கோயிலும் வரலாற்றுச் சின்னமாக விளங்குவதைக் காணலாம்.

கோயில்களின் அமைப்பு, கலைத் தன்மை, சிலை அமைப்பு போன்றவற்றைக் கொண்டு ஆட்சியாளரின் செய்திகளையும் காலத்தையும் கணக்கிட்டுக காண முயலலாம். ஒரு கோயிலை முழுமையாக எடுத்துக்கொண்டால் அது ஒரு குறிப்பிட்ட காலத்து கட்டுமானமாக இருக்காது. மதுரைக் கோயில் பல மன்னர்களால் படிப்படியாகக் கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு கோபுரமும் ஒவ்வொருவருடைய திருப்பணியாகக் காணப்படு

கிறது. அவை அளவாலும் கலைத் திறனாலும் வேறுபட்டுள்ளதை வரலாற்றுப் பார்வையில் கண்டு அவற்றுள் அடங்கியுள்ள உண்மைகளை அறிய முயலலாம்.

கோபுரங்கள், மண்டபங்கள், மதில்கள் ஆகியவற்றின் பெயர்களைக் கொண்டு பல வரலாற்று உண்மைகளைக் காண்பதற்கு இடம் உண்டு. மதுரையில் வேம்பத்தூரார் கோபுரம், சுந்தரபாண்டியன் கோபுரம், வீரப்ப மண்டபம், பேச்சக்காள் மண்டபம், வீரசந்தராயர் மண்டபம், மங்கையர்கரசி மண்டபம், சேர்வைக்காரர் மண்டபம், சுந்தர பாண்டியன் மதில் போன்று பலருடைய பெயர்களைத் தாங்கிய திருப்பணிகள் உள்ளன. இவை யாரால், எதற்காக, எந்தக் காலத்தில் கட்டப் பெற்றன என்பதைச் சிந்திக்கலாம். இந்தப் பெயர்களின் காரணங்களை அறிய முயலலாம்.

கலைகளின் தன்மை பல உண்மைகளைப் புலப்படுத்தும். குமரி மாவட்டத்திலுள்ள சுசீந்திரம் கோயிலில் சோழர்களுடைய கலையும், நெல்லை மாவட்டத்திலுள்ள ஆழ்வார் திருநகரி கோயிலில் பல்லவர் கலையும் காணப் படுவதின் காரணத்தை ஆராய்ந்தால் உறுதியாகச் சில வரலாற்று உண்மைகள் தோன்றாமல் போகாது. மேலும் இந்தக் கோயில் வெளிமண்டபத்தில் கிருஷ்ண தேவராயரின் ஒன்றரை அடி சிலை காணப்படுவதின் காரணத்தை அறிந்து வரலாற்று மறைவுகளுக்கு ஒளிகாட்ட முயலலாம்.

கோயில்களின் சேவை வரலாறு மிக முக்கியமாகக் கருத வேண்டிய ஒன்றாகும். காஞ்சீபுரம் கோயில் சேவை வழியைக் காணின் திருக்கச்சி நம்பி, இராமானுஜர், வேதாந்த தேசிகர், நாயன வரதாசாரியார், பிரம்மதந்திர சுந்தரசாமி, பிரதிவாதி பயங்கர அண்ணன், மணவாள மாமுனி, அழகிய மணவாள ஜீவர் போன்றவர்களின் தனி வரலாற்றையும் சக்கரவர்த்தி குடும்பம், தல்லாபாக்கம் குடும்பம், கோமடம் குடும்பம் போன்ற குடும்ப வரலாற்றையும் தெரிந்து கொள்ளலாம். சமயத்துக்கு இவர்கள் ஆற்றிய தொண்டு, மக்களுக்கும் இவர்களுக்கும் உள்ள தொடர்பு, காலச் சூழலில் இவர்கள் பிடித்துக் கொண்ட இடம் ஆகியவற்றை அறிவது சமயத்தையும் சமுதாயத்தையும் வரலாற்றுக் கண்கொண்டு பார்ப்பதற்கு ஒப்பாகும்.

சிலைகள், சிற்பங்கள் போன்றவற்றின் உருவ அமைப்பு காலத்தைக் காட்டும் சிறப்புத் தன்மையுடன் காணப்படுகிறது. கோயில்களில் துவார பாலகர்களை அமைக்கும் நோக்கம்

ஒன்றாயினும் அவர்களின் உருவ அமைப்பு காலத்துக்குக் காலமும் இடத்துக்கு இடமும் மாறுபட்டிருப்பதைக் காண லாம். சிலைகளின் ஆடையணிகளைக் கொண்டு அவற்றை அமைத்த அரச மரபினரை அறியலாம். காலத்தைத் தெரிந்து கொள்ளவும் அவை துணைபுரிகின்றன. சிலைகள், தூண்கள் போன்றவற்றை அமைப்பதில் பல்லவர், சோழர், பாண்டியர் தெளிவான மாற்றங்களைக் காட்டியுள்ளனர். சில கோயில் களில் கலைக் கலப்பு ஏற்பட்டிருப்பதையும் காணலாம்.

கோயில்களில் ஏற்பட்டிருக்கும் அழிவு அல்லது சிதைவு கொண்டு சில வரலாற்று நிகழ்ச்சிகளைக் கண்டு உணரலாம். மதுரைக் கோயிலில் பல சிற்பங்கள் சிதைவுற்றிருப்பது மகமதி யருடைய படையெடுப்பைக் காட்டும். திருச்செந்தூர் மூலவரின் சிலை கடலரிப்பால் சிதைவுற்றுக் காணப்படுவது உலாந்தார்கள் அல்லது டச்சுக்காரர்கள், சிலையை அகற்றிக் கடலில் எறிந்த நிகழ்ச்சியைக் குறிக்கும். அங்கு 1649-ஆம் ஆண்டு முதல் 1651-ஆம் ஆண்டு வரை வழிபாடு தடைப் பட்டிருந்த காரணத்தையும் விளக்கும்.

கோயில்களின் தலபுராணம், மரபு வழிக் கதைகள், தொடர்புடைய கதைப் பாடல்கள், பற்றுடையோர் பாடி யுள்ள பக்திப் பாடல்கள், இணைந்த பிரபந்தங்கள் ஆகியவை யும் பல உண்மைகளை மண்ணிலிருந்து பொன்னைப் பிரித்து எடுப்பது போல் காண உதவும். கற்பனைக் கலவை மிகுந்தவை என்பதை நன்கு உணர்ந்து அவற்றைப் பற்றியுள்ள ஆய்வில் ஈடுபட வேண்டும். கன்னியாகுமரி பகவதியம்மனைப் பற்றி சுமார் எட்டு கதைகள் கூறப்படுகின்றன. அவற்றிலிருந்து கோயிலை அன்னியர் கொள்ளையிட முயன்றது, கோயில் நகைகள் களவாடப் பட்ட செய்தி ஆகியவற்றை அறிய முடியும். சில கதைகள் சிக்கலுக்கு உரியதாக உள்ளன. திருச்செந்தூர் தூண்டுகை விநாயகரைப் பற்றிய கதை அவற்றுள் ஒன்று. அவ்வாறான கதைகளைப் பற்றி நன்கு ஆய்ந்து உண்மை காண்பது பயனுடையதாகும்.

கோயில் நடைமுறைகளில் சில விலக்குகள் இருப்பதின் காரணத்தை அறிந்து அவற்றால் விளங்கும் உண்மைகளைக் காணவேண்டும். கன்னியாகுமரியில் கிழக்கு வாயிலும் சுசீந்திரத்தில் மேற்கு வாயிலும் பெரும்பாலும் அடைக்கப் பட்டே இருக்கும். மக்கள் அவ்வழிகளில் செல்வது விலக்கப் பட்டுள்ளது. திருவிடைமருதூரில் சென்ற வாயில் வழியாகத்

திரும்பக் கூடாது என்ற வழக்கம் உள்ளது, அதை விளக்க ஒரு சோழ மன்னனின் கதையும் கூறப்படுகிறது. இவ்வாறுள்ள விலக்குகள் வரலாற்று உண்மைகளின் மறைவிடங்களாக இருப்பதை உணர்ந்து சிந்திக்க வேண்டும்.

கோயில்களிலுள்ள கல்வெட்டுக்கள் வரலாற்று மூலங்களாக உள்ளன. அரிய செய்திகளைத் தாங்கிக் காணப்படுகின்றன. செய்திக் குறிப்புக்களையும் மொழி வளர்ச்சி நிலைகளையும் அறிய அவை மிகவும் துணைபுரியும். காலகட்ட எழுத்தமைப்பு, மொழியமைப்பு முதலியவற்றை அவற்றைக் கொண்டு அறியலாம். அரசியல், சமயம், சமூகம், பழக்கவழக்கம் போன்ற பல செய்திகள் கல்வெட்டுக்களிலிருந்து கிடைக்கும்.

சமூகச் சிந்தனைகள்

கோயில்கள் மக்களின் வழிபாட்டிற்கு உரிய இடமாக விளங்குவதினால், சமூகச் சிறப்பு வாய்ந்ததாகவும்தான் இருக்கமுடியும். சாதிப் பிரிவுகள் சிலவகைச் சிக்கல்களுக்கு இடம் வகுத்துள்ளமையும் சிந்திக்க வேண்டும். இத்தகைய பிரிவுகளுக்கும் கோயில்களுக்கும் இடையே நிலவியுள்ள அணுக்க பிணக்க நிலைகளை நன்கு கண்டு தெளிவு காண்பது முறை. அறிவு மலர்ச்சியால் ஏற்பட்ட சிந்தனை முகிழ்ப்பால் எத்தகைய நடைமுறை மாற்றங்கள் ஏற்பட்டன என்பதை வரலாற்று வழி நின்று விளக்க வேண்டும். இறைச் சிந்தனையாலும், மானிட உரிமை என்பதை மனத்தில் கொண்டு இந்தப் பிரச்சனையை அணுகுவது முறையான ஆய்வாக மலரும். சமூக ஏற்றத் தாழ்வு உணர்வுகளுக்குக் கோயில்கள் இடம் வகுத்தனவா என்பதை நடைமுறை வழக்கங்களைக் கொண்டு ஆய்ந்து முடிவு காண்பது சிறப்பாக அமையும்.

கோயில்களால் மக்களுக்கு ஏற்பட்ட நன்மைகளை நன்கு சிந்திக்க வேண்டும். கோயில்களைச் சார்ந்த சத்திரம், சாவடி, ஊட்டுப்புரை, திருமண மண்டபம், விசாரணை மன்றம், கலையரங்கம், கல்விப் பயிலிடம் ஆகியவை இருப்பதைக் கொண்டு சமூகம் அடையும் பயனை எடுத்துக் கூறி விளக்கலாம். மன்னரும் வள்ளல்களும் கோயில்களுக்கு நிலங்கள் கொடுத்துள்ளதினால் ஏற்பட்டுள்ள பயன்களைக் கூறலாம். மடங்கள் கோயில்களுக்குச் செய்த பணிகளை ஆதாரமாகக் கொண்டு சமூக நிலையை அறிய முயலலாம்.

பஞ்ச காலங்களில் கோயில்கள் மக்களுக்கு உணர்வூட்டியதைச் சான்றுகளுடன் கூறலாம். கோயில்களில் தெப்பக்குளம்

இருப்பதைக் குறிப்பிட்டு அவை ஏன் அமைக்கப்பட்டுள்ளன என்று சிந்திக்க வேண்டும். பொதுவாகக் கோடை காலத்து வறட்சியும் சூடும் தணிக்கப்பட வேண்டும் உன்பது நோக்கமாக இருக்க வேண்டும். மயிலத்தில் ஏற்றத்தாழ்வுடன் பல குளங் களும் இராமேஸ்வரத்தில் பலவகைத் தீர்த்தங்களும் இருப்பதன் காரணங்களைச் சிந்திக்கலாம். எல்லாக் கோயில்களிலும் வடக்கு அல்லது கிழக்குத் திக்குகளில் குளங்கள் இருக்கும். ஆனால் மயிலாப்பூரில் மேற்கில் இருக்கிறது. இவற்றைப் பற்றி ஆய்ந்து சமுதாய நோக்கில் சிந்திக்கலாம். குளங்களில் வெல்லம், உப்பு, மிளகு ஆகியவற்றைக் கொட்டும் பழக்கம் உள்ளது. அவை கிருமி நாசினி என்பதை அறிந்து அறிவியல் முறையில் சிந்திக்கலாம்.

இயற்கையழிவு, போர் முதலிய ஆபத்துக் காலங்களில் கோயில்கள் பாதுகாப்பு இடங்களாக விளங்கி உள்ளன. 1952ஆம் ஆண்டில் வேதாரண்யத்தில் ஏற்பட்ட புயலழிவிலிருந்து மக்களுக்கு அங்குள்ள கோயில் பாதுகாப்பு அளித்ததைக் குறிப்பிடலாம். பல படையல் பொருள்கள் நோய்களுக்குத் தக்க தடுப்புக்களாகவும் மருந்துகளாகவும் இருப்பதை மருத்துவ முறையில் சிந்திக்கலாம். துளசி நீர் கபநோய் வராது தடுக்கும் மருந்து என்பதை அறியலாம். கற்பூரம், சாம்பிராணி போன்றவை கிருமிகளை அழிக்கும் ஆற்ற லுடையன.

கோயில்களில் நடத்தப்படும் இசை, கூத்து போன்ற கலைகள் மக்களுக்கு இன்பப் பொழுதுபோக்குகளாக அமை கின்றன, சில நிகழ்ச்சிகள் இறை உணர்வை ஊட்டுவதுடன் சமூக சீர்திருத்த உணர்வைக் கொடுப்பதாகவும் உள்ளன. இவ்வாறு பல நிலைகளில் கோயில்களுக்கும் சமூகத்துக்கும் உள்ள தொடர்புகளைப் பற்றிச் சிந்திக்கலாம்.

கலைச் சிறப்புகள்

கோயில்கள் அரிய கலைகளின் இருப்பாக விளங்குகின்றன. கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை ஆகியவை கோயி லமைப்புடன் இணைந்த கலைகளாகவும், ஆடல், பாடல், இசைச் சொற்பொழிவு போன்றவை சார்ந்த கலைகளாகவும் உள்ளன. இவற்றுள் முற்பிரிவைச் சிறப்பாய்வாகவும் பின்னதைப் பொது ஆய்வாகவும் செய்யலாம். இவற்றுடன் தேர், வாகனம், அணிகலன்கள், பூசனைத் தட்டுகள் இறை விருதுப் பொருட்கள் போன்றவற்றுள் அமைந்துள்ள கலைச்

சிறப்புக்களை விளக்கலாம். கோயில் கலைகளுக்குத் தனித் தனித் தலைப்புகள் கொடுத்து விளக்குவது சிறப்பாக அமையும்.

கட்டிடக் கலை

தமிழ் நாட்டிலுள்ள திருக்கோயில்கள் பொது அமைப்பில் தனித் தன்மையுடன் விளங்குவதை நிறுவிக் காட்ட வேண்டும். பொதுவாக அவை எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளன என்பதை விளக்கி அவற்றிலுள்ள முக்கியப் பகுதிகளைக் குறிப்பிடலாம். இத்தகைய அமைப்பின் காரணங்களை நன்கு சிந்தித்துக் கூறுவது தேவை, தத்துவ அடிப்படை, அறிவியல் அடிப்படை என இரு கூறாகக் காரணங்களை விளக்க முயலலாம்.

கட்டிடத்தின் உள்ளமைப்பு, புறவமைப்பு ஆகியவற்றை தனித்தனியாகப் பிரித்து விளக்குவது சிறப்பாக அமையும். மூலவர் இருப்பிடம், இணைந்த தெய்வங்களின் இருப்பிடங்கள், பிரகாரங்கள், மண்டபங்கள், விமானங்கள், கோபுரங்கள், மதில்கள், தெப்பக்குளம் ஆகியவற்றைப் பிரித்து அவற்றின் அமைப்பு முறையைச் சிந்திப்பது நலம். இவை எவ்வாறு கட்டப்பட்டுள்ளன என்பதைப் பொறியியல் துணையுடன் ஆராய வேண்டும். பெரிய கல் தூண்களையும் அவற்றின்மேல் இணைந்திருக்கும் உத்திரக் கற்களையும் மண்டபத்திலுள்ள மூடு கற்களையும் எவ்வாறு நிலைபெறச் செய்துள்ளனர் என்பதைக் கண்டறிதல் தேவை. கற்களுக்கு இடையில் சந்தடைந்துள்ள முறையை நன்கு அறிய வேண்டும். இயற்கைச் சூழலை மனதில் கொண்டு இத்தகைய கட்டிடங்களை எவ்வாறு கட்டியுள்ளனர் என்பதையும் காண முயலலாம்.

கோயில்களில் தலைதூக்கி நிற்பது நெடிது உயர்ந்த கோபுரங்கள். அவைகள் மாடங்களாகக் கட்டப் பெற்றுள்ளன. ஒரு பக்கத்திலிருந்து காற்று மறுபக்கம் கடந்து செல்லும் முறையில் பல திறப்புகளுடன் காணப்படுகின்றன. அடிநிலை பரந்து முடிநிலை சுருங்கியுள்ளன. இவ்வாறுள்ள பல வகை யான அமைப்பு முறைகளையும் கருத்தில் கொண்டு சிந்தனை செலுத்துவது அறிவியல் அணுகுமுறைக்கு வழிவகுக்கும். கோபுர முடிவில் கலசங்களும் பக்கங்களில் பலவகைச் சிற்பங் களும் பொருத்தப்பட்டுக் கலையுணர்வையும் இறையுணர்வை யும் இணையாகத் தோற்றுவிக்கும் பாங்கினை விளக்கலாம்,

கோபுரத்துக்கும் விமானத்துக்கும் இடையிலுள்ள வேறு பாடுகள் நன்கு சிந்திப்பதற்கு உரியன. பொதுவாக விமானங்கள்

உயரம் குறைந்து காணப்படும். ஆனால் தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம் போன்ற கோயில் விமானங்கள் கோபுரங்கள் போலவே உயரமாக உள்ளன. கோயிலின் முன்புறம் கோபுரமும் கருவறைக்கு மேலே விமானமும் எழுப்பப்படுவதைக் காணலாம். அமைப்பு முறையில் இரண்டும் வேறுபாடுகளுடன் தோன்றுகின்றன. விமானத்தின் மேல் ஒரு கலசமும் கோபுரத்துக்கு மேல் ஒற்றைப்படை எண்ணுடைய பல கலசங்களும் இருப்பதைப்பற்றிச் சிந்திக் கலாம். கோபுரங்கள் ஏழுநிலை, ஒன்பது நிலை என்று பல வாறு கட்டப்பட்டுள்ளன. மதுரை, திருவண்ணாமலை, சிதம்பரம், போன்ற கோயில் கோபுரங்களின் உட்பகுதி அறை கள் போல் இடைவெளி கொண்டுள்ளன. தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம் விமானங்களின் உட்புறம் வட்டமான இடைவெளிகளுடன் அமைந்துள்ளன. இவற்றின் அமைப்பு வேறுபாட்டின் காரணங்களைக் காண முயல்வது நல்ல ஆய்வாக அமையும்.

நூற்று எட்டுத் திருப்பதி அந்தாதியில் விழா அமைப்பு பற்றிய விளக்கம் உள்ளது. அதையும் துணையாகக் கொண்டு விமானம்பற்றிய ஆய்வில் ஈடுபடுவது நன்று. தந்திவனப் புராணம் வாயிலாகக் கோச்செங்கணானின் களிறு ஏறாத்திருப்பணி களான மாடக் கோயில்களை ஆராயலாம்.

திருவொற்றியூர், பாடி போன்ற பல இடங்களில் தூங்கானை மாடம் போன்ற அமைப்பு உள்ளது. மாறுபட்ட அமைப்புகளுக்கான காரணத்தை அறியலாம்.

கோயில்களிலுள்ள மண்டபங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவைகளாக உள்ளன. ஒரே கோயிலில் பல மண்டபங்கள் பல நோக்கங்களுடன் அமைக்கப்பட்டுள்ளள. மதுரைக் கோயிலில் குறிப்பிட்டுக் கூறும் அளவில் 21 மண்டபங்கள் இருக்கின்றன. (அட்டசித்தி மண்டபம், இணைப்பு மண்டபம், மீனாட்சி நாயக்கர் மண்டபம், முதலில் பிள்ளை மண்டபம், ஊஞ்சல் மண்டபம், கிளிக் கூண்டு மண்டபம், ஆயிரம்கால் மண்டபம், புது மண்டபம், கம்பத்தடி மண்டபம், ஆறுகால் மண்டபம், நந்தி மண்டபம், வீரப்ப மண்டபம், பேச்சக்காள் மண்டபம், வீரவசந்தராயர் மண்டபம், மங்கையர்க்கரசி மண்டபம், சேர்வைக்காரர் மண்டபம், கூட்டு வழிபாட்டு மண்டபம், பதினாறு கால் மண்டபம், தட்டுச் சுற்று மண்டபம், வசந்த மண்டபம், திருப்புகழ் மண்டபம்). இவற்றின் அமைப்பு முறை, சிற்பச் செல்வங்கள், பயன்கள் ஆகியவை ஆய்வுக்கு

உரியன. பயன்களைக் கருத்தில் கொண்டு அமைப்பைச் சிந்தித்து கலைத் தன்மையை ஒப்பீடு செய்தல் வேண்டும். கோயில் பிரகாரங்களைச் சிறப்பாக ஆய்வு செய்ய வேண்டும். அமைப்பு முறை, கலைத் தன்மை, பயன், கட்டியுள்ள பாங்கு முதலியவை விளக்கம் பெறுதல் தேவை. இராமேஸ்வரம், திருவட்டாறு, மதுரை போன்ற கோயில் பிரகாரங்கள் சிறப்புடையன.

ஆலயங்களில் தூண்கள் மிகச் சிறந்த இடத்தைப் பெற்றுக் கலையின் இருப்பிடங்களாக விளங்குகின்றன. பல்லவர், பாண்டியர், சோழர், நாயக்கர் முதலிய பல கால கட்டடத் தூண்கள் வேறுபாடுகளுடன் காணப்படுகின்றன. அவற்றின் அடிப்பகுதி, இடைப்பகுதி, முடிப்பகுதி (போதிகை) ஆகியவற்றைத் தனித்தனியாகப் பிரித்து, அவற்றின் அமைப்பு முறையைச் சிந்திக்க வேண்டும். மூலைத் தூண்களுக்கும் இடைத் தூண்களுக்கும் வேறுபாடுகள் உள்ளன. அவற்றின் பயனுக்குத் தக்கவாறு அமைக்கப்பட்டு அந்த அமைப்பில் கண்ணைக் கவரும் கலையை இணைத்துச் சிற்பிகள் தங்கள் கைவண்ணத்தின் திறனைக் காட்டிபிருக்கும் பாங்கை விளக்க வேண்டும்.

இசைத் தூண்கள் ஒரு வியப்பான கலைப் படைப்பாக விளங்குகிறது. சுசீந்திரம், தாடிக்கொம்பு ஆகிய இடங்களிலுள்ள இசைத் தூண்கள் சிறப்புடையவை. ஏழு நரம்பிசைகளையும் இனிதாக ஒரே கல்லின் பல பிரிவுகளில் அடுக்கிக் காட்டும் திறம் சிறப்புக்கு உரியது. அத்தகைய அரிய கலைப் படைப்புக்களின் பெருமையை உயர்வாகச் சிந்திக்கலாம்.

சிற்பக்கலை

பலவிதமான சிறந்த இடமாகக் கோயில்கள் காணப்படுகின்றன. அவற்றை வணக்கத்துக்கு உரியவை. என்றும் வணக்கத்துக்கு அல்லாதவை என்றும் இரு பிரிவாகப் பிரித்துக் கொள்ளலாம். மேலும், தெய்வ உருவங்கள், மானிட உருவங்கள், உயிரின உருவங்கள், கற்பனை உருவங்கள் எனவும் பகுத்துக் கொள்ளலாம். தேவர், முனிவர் ஆகியோரின் உருவங்களைத் தனியாகப் பிரித்து ஆய்வு மேற்கொள்வதிலும் தவறில்லை.

தெய்வங்களை மானிட உரு, மனித மிருகக் கலப்பு உரு, சிறப்பு உறுப்புகளுடன் கூடிய மனித உரு, எனப் பிரித்துக் கொள்ளலாம். மானிட உருவங்களில் அரசர், வள்ளல்கள்,

அடியவர், புலவர் போன்ற வரலாற்று மாந்தர்களையும், ஆடுவோர், பாடுவோர், கருவி இசைப்போர், விளக்கேந்துவோர், சாமரை வீசுவோர், காவலர், பல்தொழில் வல்லோர் போன்ற பல நிலை உடையவர்களையும் காணலாம். மிருகங்கள், பறவைகள், ஊர்வன, நீரில் வாழ்வன போன்றவை உயிரிய உருவங்களில் அடங்கும். யாளி, புருஷா மிருகம், பூதகணம், செடிகொடிகள் போன்ற கொத்து வேலைப்பாடுள்ள சிற்பங்கள் கற்பனை உருவங்களில் அடங்கும். புராணத் தொடர்புடைய சிற்பங்கள் தனியாகவும், கதை விளக்க அமைப்பிலும் காணப்படும்.

புடைப்புச் சிற்பங்கள் தனித்த சிற்பங்கள் என இரு விதமாகச் சிற்பங்கள் செதுக்கப்படும். பெரும்பாலும் அவை கல்லினால் வடிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பலவகையான கற்களில் சிற்பங்கள் பலவாறாக உருவாக்கப்பட்டுள்ளன. வணக்கத்துக்கு உரியவை கல், செம்பு, பஞ்சலோகம் ஆகியவற்றால் ஆக்கப்பட்டிருக்கும். தேர், வாகனம், முதலியவற்றில் மரத்தால் ஆன சிற்பங்களும், கோபுரம், விமானம், ஆகியவற்றில் சுதையாலான சிற்பங்களும் மிகுதியாக உள்ளன. இவை தவிர, திருநெல்வேலியில் சந்தன சபாபதியும், திருவலஞ்சுழியில் கடல்நுரையாலான விநாயகர் சிலையும், மதுரையில் பளிங்குக் கற்களினால் செதுக்கிய காசி விசுவநாதர், அன்னபூரணி, விநாயகர், ஆறுமுகன், நந்தி, மூஞ்சுறு சிற்பங்களும், அழகர் கோயிலில் தந்தத்தினால் செய்யப்பட்டுள்ள சிற்பங்களும், தேர் ஒப்பனைக்காகத் தாளினால் ஆன சிற்பங்களும், உள்ளன. வட மதுராவில் நெட்டியினால் உருவாக்கப்பட்ட கண்ணனின் சிற்பம் இருக்கிறது. தனிச் சிறப்புடைய சிற்பங்கள் தனியாக விளக்கப்படுதல் வேண்டும். சுசீந்திரம் அனுமன், தஞ்சாவூர் நந்தி, வேலூர் கோயிலிலுள்ள ஒரு தூணில் புலியைக் கொல்லும் சிற்பம், கிருஷ்ணாபுரம் கோயிலிலுள்ள பெண்ணைத் தூக்கிக் கொண்டு ஓடுவோனைக் குத்தும் சிற்பம் போன்றவைத் தனி ஆய்வுக்கு உரியன.

கலை நுட்பத்துடன் இத்தகைய சிற்பங்களைக் கலைஞர் உருவாக்கியுள்ள திறனைக் கூர்ந்து நோக்கி ஆய்வில் ஈடுபட்டு முடிவுகளைக் காணவேண்டும். மனித மனத்தில் இறையுணர்வை ஊட்டுவதற்கு இத்தகைய கலைப் படைப்புக்கள் உதவுகின்றன என்பதை நன்கு காண்பதுடன் நல்வாழ்வு பெறத் துணை செய்கின்றனவா என்பதையும் இணையாக

ஆராயலாம். கலைச் செல்வங்களைச் சமயம், சமூகம் ஆகிய வற்றுடன் தொடர்புபடுத்தி உண்மை காண்பது சிறப்பாகக் கருதப்படும்.

ஓவியக்கலை

கோயில் சுவர்கள், மேற்புறங்களில் அழகான வண்ணங் களில் அரிய முறையில் வரையப்பட்ட சிறப்பான ஓவியங்கள் இருப்பதைக் காணலாம். அவற்றை வரையும் நுட்பம், வரை பொருட்கள், வண்ணக் கலவைகள், ஓவிய நோக்கம், பயன்கள், கலைச் சிறப்பு, கலைஞரின் கைத்திறன் போன்ற பலவற்றைச் சீர்தூக்கி ஆய்வில் ஈடுபடவேண்டும். அவை எவ்வாறு காலங் கடந்து நிலைபெற்றுள்ளனஎன்பதை அறிவியல் கண்ணோட் டத்துடன் பார்க்க வேண்டும். வரலாற்றுக்கும், வாழ்வுக்கும், சமயத்துக்கும், சமுதாயத்துக்கும் அவை எந்த அளவுக்கு, உதவும் என்பதையும் அறிய முயலலாம்.

சார்புக் கலைகள்

கோயில் நடைமுறையில் இசை, நடனம், இசைச் சொற்பொழிவு போன்ற கலைகள் ஒட்டி உறவாடும் நோக்கைத் தெரிந்து கூறவேண்டும். சில கோயில்களில் குறிப்பிட்ட கலை நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட விழாக்களில் சிறப்பாக நடத்தப் படுவதின் காரணத்தை அறியலாம். திருவாரூரில் பஞ்சமுக வாத்தியமும் ஆழ்வார் திருநகரியில் கல்லால் ஆன நாதஸ்வரமும் உயர்வாக மதிக்கப் படுவதைப் பற்றிச் சிந்திக்கலாம். சார்புக் கலைகள் மக்களுக்கு எத்தகைய உணர்வை ஊட்டுகின்றன என்பதைப் பொது நோக்காகக் காண முயலலாம்.

ஆய்வுச் சிந்தனை

கோயில் ஆய்வு விரிந்த பரப்புடையது. பல்துறை அறிவு இருந்தால்தான் தெளிவான முடிவைக் காண இயலும். பல் நிலைகளில் ஆய்வு செய்ய வேண்டியிருப்பதினால் குறிப்பிட்ட ஒரு பிரிவை எடுத்து ஆழ்ந்து சிந்தித்தால் அரிய முடிவுகளைக் காண முடியும். கோயிலிலுள்ள ஒவ்வொரு பகுதியுமே ஆய்வுக்குத் தகுதியுடையதாக அமைந்துள்ளது. தனிக் கோயிலைப் பற்றி ஆய்வு செய்வதுடன் கோபுரம், மண்டபம், தெய்வச் சிற்பங்கள், ஆலய அணிகலன்கள், வழிபாட்டு முறைகள், விழாக்கள், தூண்கள், மரச் சிற்பங்கள், படையல்கள், வாகனங்கள், தேர், கோயில் மரபுகள் என்று

ஏதாவது ஒன்றை எடுத்துத் தமிழ்நாட்டை மொத்தமாகக் கருத்தில் கொண்டு ஆராய்வது பயன்மிக்கதாக அமையலாம்.

கோயில் ஆய்வின் வாயிலாகப் பண்பாடு, வரலாறு, சமூகம், சமயம், மக்களின் வாழ்க்கை நிலை, கலைத்திறன் முதலியவற்றைப் பற்றி நன்றாக அறிய வாய்பபு உள்ளது. தமிழ்நாட்டுக் கோயில் ஆய்வு ஒரு தனித் துறையாக அமைக்கப் பட வேண்டிய அளவுக்குப் பரந்தும் விரிந்தும் காணப் படுவதுடன் உயர்வையும் உணர்வையும் உண்மையாக அளவிட்டுக் காட்டும் தகுதியுடையதாகவும் உள்ளது. சீரிய முறையில் சிந்தித்தால் அரிய கருத்துக்களைத் திருக்கோயில் ஆய்வின் வழியாக உலகுக்கு வழங்கித் தமிழ்நாட்டுக்குப் பெரும் புகழைச் சேர்ப்பதுடன் நற்பயனையும் பெறலாம்.

ஊமையும் பேசலாம்

செவிடாகவும் ஊமையாகவும் மனவளர்ச்சி குன்றியும் இருந்த - மருத்துவர்களால் எதுவும் செய்ய இயலாது எனக் கைவிடப்பட்ட – 23 வயது நபர் ஒருவர் கடந்த இரண்டு வருடங்களாக ஒரு சராசரி மனிதரைப்போல வாழ்ந்து வருகிறார். அவர் தம் தேவைகளைக் கணிப்பொறி கற்றுத் தந்த மொழிவழி நிறைவேற்றிக் கொள்கிறார். சிம்பன்ஸி என்கிற வாயில்லாக் குரங்குகளுக்காகத் துவானே ரும்பாஹ் என்ற மனவியல் நிபுணரால் உருவாக்கப்பட்ட கணிப்பொறி மொழி இவருக்கும் பயன்பட்டது. இந்த கணிப்பொறியில் 225 குறியீடுகள் உள்ளன. ஒவ்வொரு குறியீடும் ஒரு ஆங்கிலச் சொல்லைக் குறிக்கும் 'ஆப்பிள்', 'கொடு', 'அறை' 'ஆம்', 'இல்லை', போன்ற சொற்களை இந்தக் குறியீடுகள் வழி உணர்த்தித் தம் தேவைகளை இவர் நிறைவேற்றிக் கொள்கிறார். இந்த மொழிக்கு 'Yerkish' என்று பெயர். (இந்த மொழி உருவாக்கப்பட்ட Yerkes Primate Centre at Atlanta's Emory University என்பதன் சுருக்கம்.)

முதலில் இந்த மொழியை கன்ஷி(Kanzi) என்ற சிம்பன்ஸி குரங்கிற்குக் கற்றுக்கொடுத்தனர். பின்னர் இது மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கும் கற்றுத் தரப்பட்டது. இதை இன்னும் விரிவுபடுத்த ரும்பாஹ் தீர்மானித்துள்ளார். தற்போது இந்தப் பொறியின் விலை 30,000 ரூபாய்.

"நன்றி! அறிவியல் பண்ணை, தமிழ்ப் பல்கலைக் கழகம்"

பாவேந்தரின்
குடும்பவிளக்கு : விருந்தோம்பல்

டாக்டர் இராம. சுப்பிரமணியன்,
எம். ஏ. பி. எல், எம். லிட். எஸ்ஸி, பிஎச். டி.,

முன்னுரை :

நிலையான இருப்பிடமும் நெடுங்காலத்திற்கு உரிய உணவு முதலியனவும் தேடி வருந்தாமல், பறவைகளைப் போலவும் விலங்குகளைப் போலவும் கிடைத்ததை உண்டு கவலை இல்லாமல் வாழும் வாழ்க்கையில் துன்பம் குறைவு. வீடு அமைத்துக் கொண்டு நாளைக்கு எனப் பல பொருளும் தேடி வருந்தி அவற்றைக் காத்துக் கவலையுறும் இல்வாழ்க்கை யில் துன்பம் மிகுதி. ஆயினும் அதற்கு ஈடான நன்மையும் இருக்க வேண்டுமன்றோ ? அதுதான் புதியவராக வந்தவர்க்கு உதவி செய்து வாழும் நன்மை – விருந்தோம்பும் - நன்மை ஆகும். 'அதனால், வீட்டிலிருந்து பொருள் சேர்த்துக் காத்து வாழும் துன்பமுள்ள வாழ்க்கை எல்லாம் விருந்தினரைப் போற்றி அவர்களுக்கு உதவி செய்யும் அறத்தின் பொருட்டே என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.[1]'

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. (81)

'குடும்ப விளக்கி'ன் முதற் பகுதி குடும்பப் பண்பை விளக்குவது; இந்த இரண்டாம் பகுதியில், விருந்தினர்களை வரவேற்று விருந்தோம்பும் முறையும், இல்லத்தலைவரின் இளமை நினைவுகளும், எதிர்காலத்தலைவரின் காதலும், மற்றும் வாழ்க்கைப் பண்பும் காணப்படுகின்றன.

கவிஞர் கருத்து

"'குடும்ப விளக்கு' முதற் பகுதியின்கண் நல்லதோர் குடும்பத்தின் ஒரு நாள் நிகழ்ச்சி குறிக்கப்பெற்றிருந்தது. ஆயினும் அற்றைநாள் விருந்தினர் வரவில்லை.

★ ★ ★ ★

இவ்விரண்டாம் பகுதியின்கண் விருந்து வந்தது குறிக்கப் பெற்றுள்ளது.

★ ★ ★ ★

1. டாக்டர் மு. வரதராசன், திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், பாரிநிலையம், சென்னை, 1959, பக். 327.

முதற் பகுதியின் நிகழ்ச்சிக்கும்,இந் நிகழ்ச்சிக்கும் இடையில் எவ்வளவு நாள் சென்றிருக்குமோ எனில் ஏறக்குறைய இரண்டாண்டுகள் என்க. இப்பகுதியில் வீட்டின் முதியோர் தள்ளாமை அடைந்துள்ளனர். குடும்பத் தலைவர்களுக்குத் தம் பிள்ளையின் காதல் உள்ளம் புலனாகிறது. ''[2]

மேலும், ஒரு நிகழ்ச்சியில், பாவலர், “அப்பொழுது, அப்பொழுது இது திட்டமிட்டு எழுதப்பட்டது, இந்த நூற் பகுதிகளைக் காசுக்கோ, கனமா இருக்கணும் என்பதற்கோ எழுதலே, சொற்களை எண்ணி, எண்ணியே மனத்தராசிலே எடை போட்டு எழுதினேன்; கற்பனை வாழ்க்கையை விட நடைமுறைதான் எனக்குப் பெரிதாப் பட்டது. இதனால் படிப்பவர்க்கு எளிமையும் தெளிவும் கூடுகின்றன. கருத்துக்குத் தேவையான சொற்கள் மட்டுமே தேவைப்படுகின்றன. கவிதைக் கலையில் சிறிய வடிவங்களே சுருத்தூற்றின் சுவையைக் கூட்டிவிடும்” என்று கூறுகின்றார்.[3]

இப் பகுதியில் இல்லத் தலைவரின் இளமை நினைவுகள் எதிர்காலத் தலைவர்களின் காதல் ஆகியவை அனைத்தும் விரித்துரைக்கப் பெறுகிறது. விருந்தோம்பும் பண்பு தமிழர் களின் சிறப்புப் பண்பு. வில்லியனூர்ச் செல்வர் திருமாவரசும் மலர்க்குழலி அம்மாவும் நாவரசும்பெண்ணாள் நகைமுத்தும் விருந்தினராக வந்து இறங்கினர். அன்னார் வருகையினைத் தன் மாமன் மாமியிடம் அவள் கூறினள். அப்போது அம் முதியவர்,

நற்றமிழர் சேர்த்த புகழ்
    ஞாலத்தில் என்னவெனில்,
“உற்ற விருந்தை
    உயிரென்று — பெற்றுவத்தல்”
மோந்தால் குழையும்அனிச்
    சம்பூ முகமாற்றம்
வாய்ந்தால் குழையும்
    வருவிருந்தென்(று) — ஆய்ந்ததிரு
வள்ளுவனார் சொன்னார்
    அதனை நீ எப்போதும்

2. பாவேந்தர் அவர்களின் கருத்து
3. த கோவேந்தன்: என் நினைவுகளில் பாவேந்தர், பூக்கூடை பதிப்பகம், சென்னை. 1983 பக். 49.

உள்ளத்து வைப்பாய்
ஒருபோதும் — தள்ளாதே !

என்கிறார்.[4] மாமியாரோ சமையலுக்குரிய பக்குவங்களை எடுத்துரைக்கின்றார்.

செஞ்சுடர்

இல்லத் தலைவி தன் பணிகளையும் கடமையினையும் உணர்ந்தவளாக இருத்தல் வேண்டும். அவள் வீட்டின் செஞ் சுடராக அமைந்து, எங்கும் இருண்மை மாய்ந்துள்ளவற்றை அறிவொளித் துலக்க இயலும்.

ஒண்சுடர் பாண்டில் செஞ்சுடர் போல்
மனைக்கு விளக்கு ஆயினள் மன்ற
புறவணி நாடன் புதல்வன் தாயே. (ஐங். 405)

என்று குத்து விளக்கின் செஞ்சுடர்போல் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் தலைவியை அறிமுகப் படுத்துகிறது ஐங்குறு நூறு. அத்தகைய ஒரு அறிவுச் சுடரையே புரட்சிக் கவிஞரும் அறிமுகப்படுத்துகிறார்.

நந்தா விளக்கு உந்தன்
நல்லறிவே — செந்திருவே[5]

இளமைக்கழிவிரக்கம்

விருந்தினர் மாமன் மாமியாரைக் காணச் செல்கின்றனர். அம்முதியவர் தம் தள்ளா இளமையை நினைந்து கழிவிரக்கம் கொள்கின்றார்.

புறநானுள்றின் புதிய வடிவம் :-
காவிரியில் என்றன்
கணையாழி தேடுகையில்
பாவிரியப் பணிபாடிப்
பையன் ஓர் — ஆவினை
ஆற்றில் குளிப்பாட்டும்

---

4. பாரதிதாசன் : குடும்ப விளக்கு, பதி. 2 பாரி நிலையம், சென்னை, 1960, ப. 48

5. பக். 48.

போதில் அதன் கால்கள்
சேற்றில் மாட்டித்
திகைத்தலை நான் — மாற்றுதற்குப்
போய்முழுகி னேன் என்
புறமுதுகில் காலூன்றி
மாய்வின்றி மாடு
கரையேறச் — செய்நானும்
மாட்டின்வால் பற்றியதால்
சேற்றினிலே மாயவில்லை[6]

என அமைகின்றது இல்லறச் சிறப்பை எடுத்து விளக்குவார், நாட்டு வாழ்வே நம் வாழ்வாக அமைதல் வேண்டும், மக்கட் பேறு அளவோடு அமைதல் வேண்டும். சேர்க்கை ஒழித்துக் கருத்தடையேனும் செய்க'' என்று அம்முதுகிழவர் அறிவுரை கூறியுள்ளார். 'உலமைத்தமர் என்று தாமுழைக்க வேண்டும். அமைவான இன்பம் அதுதான்' என்ற கருத்துத் தமிழர் வாழ்க்கையில் ஊன்றி நிலைத்து வந்த உயர் கருத்து.'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற எழுச்சியினை ஏற்ற இடம் நோக்கிப் போற்றியுரைக்கின்றார் பாவேந்தர்.

வள்ளுவம், அகத்துவம்வழி பாவேந்தரின் நெஞ்சில் உருவெடுத்த உயர் காட்சியே காவியத்தில் படம் பிடித்துக் காட்டப்படுகின்றது.

குடும்பவிளக்கின் காதல், களவியல் களத்தில் வென்று, மன்றல் களத்தில் மகிழ்ச்சியுடன் நிறைவுறுவதைக் காணலாம். பகுத்தறிவுப் பாசறையில் பயின்று வந்த பாவேந்தர் முற்போக்கு எண்ணங் கொண்டவர். ஆதலின் அவர் உள்ளம் கடிமணத்தை வன்மையாகக் கண்டித்தது. இயற்கை நெறியில் வந்த சுதந்திரத் திருமணத்தையே காவியத்தில் நடத்து கின்றார்.

கண்டு மணம்புரிதல்
வேண்டும் கடிமணமும்
பண்டை மணமென்றும்
பார்ப்பானைக் — கொண்ட
அடிமை மணமென்றும்
சொல்லும் அனைத்தும்

6. பக். 58.

கடிந்து பதிவுமணம்
காணல் — கடனாகும்[7]

என்பது திருமணம் பற்றிய புரட்சிக் கவிஞரின் கருத்து ஆகும்

சமயமும் சாதியும்

காப்பியத் தலைவி பெண்கல்வியின் பெருமை பேசுவாள் ; சாதி சமயப் பிணக்குகளையும் சாடுகின்றாள். இது புரட்சிப் படைப்பாகும்.

சமையல்முன் னேற்ற மின்றித்
தாழ்தற்கு நமது நாட்டில்
சமயமும் சாதி என்ற
சழக்கும்கா ரணம்என் பேன்நான்
அமைவுறும் செட்டி வீட்டில்
அயலவன் உண்ப தில்லை
தமைஉயர் வென்பான் நாய்க்கண்
முதலிநீ தாழ்ந்தோன் என்பான்[8]

பாவேந்தர் படைத்துக் காட்டும் பெண்கள் அனைவரும் இக்கருத்தை வலியுறுத்தும் புதுமைப் பாத்திரங்களாகவே அமைத்துள்ளனர்.

அன்னை மகிழ்ச்சி

சங்க இலக்கிய அகத்துறைப் பாக்களின் நாடகப் போக்கு இக் குடும்பக் காவியத்தில் பாவேந்தர் அமைத்துள்ளார். பள்ளியினின்றும் திரும்பி வருகின்ற குழந்தைகளை ஒரு தாய் எவ்வாறு அன்பொழுக வரவேற்பாள் என்பதனை,

நின்றாள் ! சிரித்தாள்
நிலைபெயர்ந்தாள் கானத்து
மன்றாடும் மாமயிலாள்
வாரீர் என அழைத்தாள்
உள்ளம் பூரித்தாள்
உயிரோவியங்கள் நிகர்

7. பக். 70.
8. பக். 80

பிள்ளைகள் வந்தார்கள்
பேச்சோடும் பாட்டோடும்![9]

என ஓவியமாக்கிக் காட்டுகின்றார். வீட்டின் பின்புறம் உள்ள தென்னை, பனை, பலா, ஆகியவற்றைக் காவிய மாந்தர் வாயிலாக அவர் புனைந்து காட்டுகின்றார். பனைபற்றிக் கூறும்போது தற்குறிப்பேற்ற அணி வகையால் விளக்குகின்றார்.

வாராய்என் றெனைஓலை விசிறியினால்
வரவேற்று நுங்கும் சாறும்
சீராகத் தந்ததெனில், பனைபோலும்
நட்புமுறை தெரிந்தா ருண்டோ ?[10]

என்று பிள்ளைகள் விளையாட்டின்போது மெச்சிப் பேசுகின்றதாக அமைத்து விடுகின்றார்.

புதுக்காதல்

வேடப்பன்-நகைமுத்து இணையினரின் காதல் களவியல் நெறி வழிப்பட்டது. களவியல் இலக்கணத்தினை அடிப்படையாகக் கொண்டது. குறள் காட்டும் களவியலின் வாயில்களாக தகை அணங்குறுத்தல், குறிப்பறிதல், புணர்ச்சி மகிழ்தல், நலம் புனைந்துரைத்தல், காதற் சிறப்புரைத்தல் முதலியவைகளின் தாக்கத்தைக் குடும்பவிளக்கில் காணலாம்.

சிற்பத்திற் பெரும்புரட்சி செயப் பிறந்தாள்!
காணுதற்குக் கருவியோ கயற்கண் இன்பக்
காட்சி தரும் பொருளன்றோ! வீழ்ந்தார் வாழ்வைப்
பூணுதற்கே இதழோரப் புன்னகைதான்
பூவாத புதுக்காதல் பூக்க நோக்கி
ஆணினத்தைக் கவர்கின்றாள்! நிலாமுகத்தாள்[11]

என்பவை தலைவன் நெஞ்சில் தலைவி பற்றித் தோன்றிய கருத்துக்கள், இவை திருவள்ளுவர் களவியல் கூறும் தகையணங் குறுத்தல், குறிப்பறிதல் போன்ற காதல் நிலைகளைக் குறிப்பாக அமைத்துள்ளார்.

9. பக். 83-84
10. பக். 87
11. பக். 91 92

வேடப்பனுக்கும் அழகு நகைமுத்தாளுக்குமிடையே அரும்பிய காதல் அவன் மனநிலையினைக் கூறுகின்றது. வேடப்பனுக்குத் திறந்திருந்த சுவடியிலே திறந்த விழி செல்லாமல்

புதுநூலின் முதல் ஏட்டில் கயிறு சேர்த்துப்
பொன்னான தன் காதல் இலக்கியத்தில்
இதுவரைக்கும் உளஞ்செலுத்தி இருந்தான்![12]

கண்ணொடு கண் இணை நோக்கு ஒக்குமாயின், வாய்ச் சொற்களால் என்ன பயனும் இல என்பது களவியல் வள்ளுவம், கண்கள் பேசும் காதல் மொழி வாய் மொழிகளை விட ஆற்றல் வாய்ந்தது. ஆழமும் மிக்கது 'மைக்ரோ வேவ்' முறையில், காதல் மொழிகளின் பொருளை நெஞ்சங்களில் பதிவு செய்யும் அக் காட்சியொன்று பாவேந்தரின் கைகளில் அழகு பெறுகின்றது

மணவழகன் வீட்டிலிருந்து விருந்தினர் விடைபெறும் நேரம். அனைவரும் கலந்து மகிழ்ச்சியாக விடைபெறும் போது, இரண்டு இளம் உள்ளங்கள் வேகத் தொடங்கு கின்றன. சிறுநேர பிரிவையும் தாங்காது இணைந்த இதயங் கள் வெவ்வேறாவது எப்படி ? எனினும் தவிர்க்க முடியாத நிலை களவியல் வாழ்வில் பிரியும் நிகழ்ச்சி ஊறிப் போய்விட்ட ஒன்று பிரியா விடைபெறும் அந்நேரத்தில் கண் செய்யும் காதல் விளையாட்டினைக் காண்க.

T 4740

நூறுமுறை அவள் பார்த்தாள், அவனை ! ஆளன்
நூறுமுறை நோக்கினான். இனிது பெற்ற
பேறுதனை இழப்பாள் போல், குறட்டி னின்று
பெயர்த்த அடி கீழ்ப்படியில் வைக்கு முன்னர்
ஆறுமுறை அவள் பார்த்தாள், அவனும் பார்த்தான்.[13]

அவளும் அப்படிதான், உணவெல்லாம் முடிந்த பினனர் விருந்தினர் வில்லியனூர் புறப்படுகின்றனர், வண்டியும் வந்தடைந்தது. எல்லோரும் ஏறி அமர்ந்தனர். வண்டியும் நகர்ந்துவிட்டது. ஆனால் வேடப்பன் உள்ளம் வெந்தது. அதனை விளக்குவதே புதுமையாக அமைந்து விடுகிறது.

12. பக். 93
13. பக் 94 95

... ... நெஞ்சைக்
கிளிபறித்துப் போனதனால் மரம்போல் அங்கே
தண்டமிழ்த்தேன் உண்டவர்கள் பொருளை எண்ணித்
தனிப்பார் போல் தனித்திருந்தான் ... [14]

என்று நிறைவுறுகிறது விருந்தோம்பல் பகுதி.

நூல்கள்

பாரதிதாசன் : ***குடும்ப விளக்கு***, (ஐந்து பகுதிகளும் சேர்ந்த முழு நூல்) பதி. 2, பாரிநிலையம், சென்னை. 1960.

வரதராசன், மு : ***திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்***, பாரி நிலையம், சென்னை, 1956.

கோவேந்தன், த : ***என் நினைவுகளில் பாவேந்தர்***, பூக்கூடை பதிப்பகம், சென்னை. 1983.

---

14. பக். 95

தொல்காப்பியமும் பழந்தமிழ் மொழி வரலாறும்

டாக்டர் மோ. இசரயேல்

தமிழ்மொழி வரலாற்றில் பழந்தமிழ் ஒரு தனியான இடத்தைப் பெற்றுள்ளது. முந்தைத் திராவிடமொழியின்று சில இடங்களில் வேறுபட்டும், பல இடங்களில் ஒத்தும் அமைந்து இம்மொழி காலப்போக்கில் மேலும் பல மாற்றங்களைக் கண்டுள்ளது. பழந்தமிழ் என்றதும் சங்கத் தமிழ் என்ற எண்ணந்தான் யாவர் மனத்திலும் தோன்றும். ஆனால் இதனைத் தொல்காப்பியத் தமிழ், சங்க இலக்கியத் தமிழ் என இரண்டாக வேறுபடுத்திக் காண இடமுண்டு.

இன்று நமக்குக் கிடைக்கும் பழந்தமிழ் நூல்களில் தொல்காப்பியமே மிகத் தொன்மையானது என்று கருதப்படுகிறது. இதனை அடுத்தனவாகச் சங்கஇலக்கியமொழி பல இடங்களில் தொல்காப்பியத்திற்கு ஒத்தும், ஒரு சில இடங்களில் வேறுபட்டும், சில புதிய வழக்குகளைப் படைத்தும் அமைந்துள்ளமையைக் காணலாம்.

தொல்காப்பியனார் "வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலக"த்தின் வழக்கு, செய்யுள் ஆகிய இருவகை மொழியின் எழுத்து, சொல், பொருள் ஆகியவற்றை ஆய்ந்தும், முந்து நூல்களை முறைப்படக்கண்டும் இலக்கணம் கூறியுள்ளார் எனப் பாயிரம் கூறுகின்றது. எனவே தொல்காப்பியனார் அவர் காலத்திற்கு முன்னைய நூல்களில் கூறப்பட்டனவும், அவர்காலத்தில் தமிழகத்தில் வழங்கியனவும் ஆகிய பேச்சுமொழி, எழுத்துமொழி ஆகிய இரண்டற்கும் உரியதாகிய இலக்கணம் வகுத்துள்ளார் என அறிதும். காலப் போக்கில் மொழி மாறும் இயல்பினை அவரே ஒப்புக்கொள்ளுகின்றார், "கடிசொல் இல்லைக் காலத்துப்படினே" (தொ. சொல். 452) என்னும் தொகாப்பிய நூற்பா இவ்வுண்மையினைத் தெளிவுறுத்தி நிற்கின்றது. தொல்காப்பியனார் வகுத்துள்ள இலக்கணச் செய்திகள் தமிழ்மொழி வரலாற்றில் பெறும் இடத்தினைத் தொடர்ந்து காண்போம்.

ஒலி நிலை

தொல்காப்பியனார் ஒலியன்களின் பிறப்புமுறை பற்றிப் பிறப்பியலில் கூறியுள்ளார். அவர் தடையொலிகளுக்குப் பொதுவாக 'ஒற்ற' (தொ. எ. 93, 94) என்ற சொல்லைப்

பயன்படுத்துகிறார். றகரம் இன்று நாவானது அண்ணத்தைத் தொடர்ந்து வருடுகின்றமையால் பிறக்கும் ஆடொலி (tr.ll) யாக மொழியில் ஆட்சி பெற்றுள்ளது.

அணரி நுனிநா அண்ணம் ஒற்ற
றஃகான் னஃகான் ஆயிரண்டும் பிறக்கும் (தொ. எ. 94)

எனத் தொல்காப்பியனார் கூறுவதினின்று, றகரம் அவர் காலத்தில் முழுஅளவில் ஒரு தடையொலி (stop) எனத் தெரிகிறது,

மேலும் ழகர ஒலியும் இன்று நாம் எவ்வாறு ஒலிக்க வேண்டும் என வலியுறுத்துகின்றோமோ அதினின்று சிறிது வேறுபட்டு அவர் காலத்தில் ஒலிக்கப்பட்டிருக்கவேண்டும். இன்று இது ஒரு தொடர்ஒலியாக (continuant) மொழியில் இடம் பெற்றுள்ளது. தொல்காப்பியனார் இதனை ரகர ஒலியை ஒட்டி நிற்கும் ஒரு வருடொலி (flap) யாகவே (தொ. எ. 95) கூறியுள்ளார். ழகரம் இன்று பல திராவிட மொழிகளிலும் நாவளைவின வருடொலியாக (retroflex flap) அமைந்துள்ளமையும் மேலும் இதனை வலியுறுத்தி நிற்கின்றது.

தொல்காப்பியனார் நுந்தை என்னும் முறைப் பெயரில் நகரத்துடன் மொழி முதற் குற்றியலுகரம் அமைந்தது எனவும் அது அவ்விடத்தில் முற்றியலுகரத்துடன் பொருள் வேறு படாது அமைந்தது எனவும் (தொ. எ. 67, 68) கூறுகின்றார். இத்தகைய குற்றியலுகரம் இன்றைய மொழியில் இடம் பெறவில்லை.

ஒலியன் நிலை

தொல்காப்பியனார் அகர முதல் னகர இறுவாய் 12 உயிரொலிகளையும் 18 மெய்யொலிகளையும் (தொ. எ. 1) கூறியுள்ளார்.

அவர் அகரமும் இகரமும் இணைந்தும், அகர யகரம் இணைந்து நின்றும் ஐகாரம் ஒலிக்கும் (தொ. எ. 54, 56) என்கின்றார். மேலும் அவர் 'அகர உகரம் ஔகாரமாகும்' (தொ. எ. 55) என்கின்றார்.

எ-டு:- ஐவனம் (அஇவனம், அய்வனம்)
ஔவை (அஉவை)

இவண் தொல்காப்பியனார் காலத்தில் ஐகார ஔகார உயிர்கள் கூட்டொலிகளே என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

அவர் 'இகர யகரம் இறுதி விரவும்' (தொ. எ. 58) என்று கூறுகின்றார். எ-டு. நாய், நாஇ. இவ்வாறான பழந்தமிழில் இகர யகர உறழ்ச்சி நிலையினை வினையெச்ச ஈறுகளிலும் மொழியில் காணமுடிகின்றது.

ஆய் / ஆயி ; கூய் / கூயி

தொல்காப்பியனார் கூறும் மெய்யொலிகளில் ஆறு வல்லின ஒலிகளும் (தொ. எ. 19) ஆறு இடையின ஒலிகளும்(தொ. எ.21) மொழியில் தெளிவாகப் பொருள் வேறுபாடு செய்வனவாக வந்துள்ளன. அவர் கூறும் மெல்லொலி ஆறனுள்(தொ. எ.20), ங கரம் பொருள் வேறுபாடு செய்யுமாறில்லை[1]. ஞகரமும், நகரமும் மொழிமுதலில் உறழ்ச்சியுடன் அமைகின்றன. எ-டு. ஞரல, நரல (அகம் 37); ஞிணம், நிணம்(அகம். 9; நற்.45) ஞ், ந், ன் ஆகிய மூன்று மெய்யொலிகளும் மொழி இறுதியில் நின்று பொருள் வேறுபாடு செய்கின்றன. எ-டு. உரிஞ் (உராய்வு), வெரிந் (முதுகு), வெரின் (அஞ்சினால்). காலப் போக்கில் இம்மூன்று ஒலிகளும் இணைந்து ஒன்றாகவே (நகர மாக) அமையலாயின. இக்கால மொழியில் ந், ன் ஆகியன இரட்டித்து வருமிடங்களில் மட்டும் பொருள் வேறுபாடு செய்கின்றன.

எ-டு:- நந்நூல் நன்னூல்
எந்நாள் என்னால்

இன்று ஞகரம் மொழியில் பல இடங்களிலும் பொருள் வேறுபாடு செய்யா நிலையில் உள்ளது. மேலும் இது இன்று மொழியில் இரட்டித்து வருதலும் இல்லை.

மொழிமுதல்

தொல்காப்பியனார் சகரம் அ, ஐ, ஔ ஆகிய உயிர்களுடன் இணைந்து மொழி முதலில் வராது என்கின்றார் (தொ. எ. 62). ஆனால் காலப்போக்கில் பல சொற்களில் ச, சை, சௌ என்பன மொழி முதலில் வந்துள்ளன.

எ-டு:- சகடு (அகம். 301), சயம் (அகம். 25), சடை (புறம்.43)
சையம் (பரி. 6), சௌக்கியம்.

மேலும் அவர் ஞகரம் ஆ, எ, ஒ என்னும் மூவுயிர்களுடன் தான் வரும் என்கின்றார் (தொ. எ. 64). சங்க இலக்கியத்தில் ஞகரம் அகர இகர உயிர்களுடன் இணைந்து மொழிமுதலில் வருதலைக் காணலாம்.

எ-டு:- ஞமலி (அகம். 122), ஞமல (புறம். 90)
ஞிமிறு (அகம். 59), ஞிணம் (புறம். 177)

ஞகரம் அகரத்துடன் வருதல் ஞகர நகர உறழ்ச்சியின் விளைவே எனலாம்.

எ-டு:- ஞிணம் (புறம். 177) நிண (நற். 45)
ஞரல (அகம். 37) நரல (அகம். 13)

மேலும் முந்தைத் திராவிடமொழியில் ச், ஞ், ய் என்னும் மெய்களுக்கு எகர அகர மாற்றமும் மொழியில் அமைந்த இரட்டை வடிவங்களுக்கு அடிப்படையாக இருக்கலாம்.

எ-டு:- ஞண்டு, நெண்டு (அகம். 204)
ஞமர் (புறம். 90), ஞெமர் (புறம். 90)
ஞமன் (புறம் 6) ஞெமன் (அகம். 349)

தொல்காப்பியனார் யகரமெய் ஆகாரத்தோடு மட்டுமே மொழிமுதலில் வரும் என்கின்றார் (தொ. எ. 65). காலப் போக்கில் இது அ, உ, ஊ, ஔ போன்று உயிர்களுடனும் மொழிமுதலில் இடம்பெற்றுள்ளது.

எ-டு:- யவனர் (அகம். 149), யுகம், அகம் (கலி - 43), யௌவனம், யோகம் (சிறு. மூலம். 42)

இவையாவும் கடன்சொற்களே. இவற்றில் சில சங்க இலக்கியத்திலேயே ஆட்சி பெறலாயின.

இறுதி நிலை

தொல்காப்பியனார் ககரமும் வகரமும் ஔவுடன் மட்டும் இணைந்து மொழி இறுதியில் வரும் (தொ.எ.70) என்கின்றார். இவ்வீறுகள் சங்க இலக்கியத்தில் தனிச்சொல் ஈறாகக் காணப் படவில்லை, மொழி இறுதியில் வருவனவாகக் கொள்ளத்தக்க சில வழக்குகள் காணப்படுகின்றன.

எ. டு :- கௌவ (ஐங். 125). வௌவிய (நற். 100)

நகரம் ஒகரத்துடன் மட்டும்தான் இணைந்து மொழி இறுதி

யில் நிற்கும். (தொ. எ. 72) என்கின்றார் தொல்காப்பியனார். எ. டு : நொப்பறை (குறு. 172) காலப்போக்கில் இவ்வீற்றுச் சொல் மொழி வழக்கில் காணப்படவில்லை.

மேலும் அவர் 'உ ஊ காரம் நவவொடு நவிலா (தொ. எ. 74) என்று கூறுங்கால் உகரம் நகர வகரத்தொடு இணைந்து மொழியிறுதியில் வருதல் இல்லை என்கின்றார். தொல்காப்பிய மொழியிலும் பிற்கால மொழியிலும் வழக்கில் அமைந்துள்ள அகல்வு (நற். 388), அதிர்வு (கலி. 81), அளவு (தொ. எ. 50) அழிவு (தொ. பொ. 109) போன்ற சொற்களில் புகரமே வுகரமாகத் திரிந்திருக்கலாம் என டாக்டர் செ. வெ. சண்முகம் கூறுவது இங்கு ஏற்றுக்கொள்ளற் குரியதே.[3]

தொல்காப்பியனார் 'உச்ச காரம் இரு மொழிக் குரித்தே' (தொ. எ. 75) எனக் கூறுவதில் முற்றியலுகர ஈறு மட்டுமே அடங்கும் எனத் தெரிகிறது. மேலும் பசு போன்ற கடன் சொற்களும் இவண் கருதப்பட வில்லை என அறியலாம்

உப்பகார இறுதி ஒன்று எனவும் அது (தன்வினை, பிறவினை, ஆகிய) இருவயின் நின்று பொருள் தரும் எனவும் தொல்காப்பியனார் கூறுகின்றார். இவண் 'தபு' என்ற சொல் பழந்தமிழில் வழங்கிய நெறியினை அறிந்து கொள்ளத்தக்க செய்தி கிடைக்கின்றது.

தப (தொ. எ. 102. நற். 52, அகம், 18).

நகரம் இரு மொழிகளிலும் (தொ. எ. 79) ஞகரம் ஒரு மொழியிலும் தொ. எ. 80), வகரம் நான்கு மொழிகளிலும் (தொ. எ. 81) ஈற்றில் அமையும் என்பது பழந்தமிழ் மொழியின் சொல் வழக்கு நிலையைப் புரிந்து கொள்ள வழிவகுக்குன்றது.

னகர ஈற்றுச்சொல் மகரத்துடன் மயங்குதல் விலக்கப்பட்ட சொற்கள் ஒன்பது எனத் தொல்காப்பியனார் (தொ. எ. 82) கூறுகின்றார். இதற்கு உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்ற உகின், சொகின். விழன், பயின், அழன், புழன், குயின், கடாள், வயான் என்னும் ஒன்பது சொற்கள் தவிர ஈறு மயங்காத வேறு சில சொற்களும் சங்க இலக்கியத்தில் காணப் படுகின்றன.

எ. டு ; வயின், செயின், கவான்.

மெய்ம்மயக்கம்

தொல்காப்பியனார் கூறுகின்ற சில மெய்ம்மயக்கங்களுக்குத் தனிச் சொல்லில் சான்றுகள் காணக்கிடைத்தல் இல. எ.டு: ண்ச், ண்ஞ். ண்ய், ண்வ், ண்ச், ண்ஞ், ண்ய். ண்வ் ஆகியன. மெய்ம்மயக்கம் என்பது தனிச் சொல்லில் அமைவது தான் சிறப்புடையது. ஞ்ய், ந்ய், வ்ய் போன்ற மெய்ம்மயக்கம் தொகைச் சொல்லில் கூடக்காணக் கிடைத்தல் இல்லை. தொல்காப்பியனார் காலத்தில் அவர் குறிப்பிடும் மெய்ம்மயக்கங்கள் எல்லாம் தனிச் சொல்லில் இடம்பெற்றுப் பின்னர் மறைந்திருக்கலாம் எனக் கருத இடம் உண்டு.

சொல்நிலை

வழக்கிறத்தல்

தொல்காப்பியனார் கூறியுள்ள சில மொழி வழக்குகளுக்கும், அமைப்புகளுக்கும் சங்க இலக்கிய மொழியிலும் பிற்கால மொழியிலும் சான்று கிடைக்கப் பெறவில்லை. எனவே அக்கூறுகளுக்குத் தொல்காப்பியமே வரலாற்றுச் சான்றாக அமைகின்றது. அவை பிற்கால மொழியில் மறைந்து விட்டன என்றும் கூறலாம்.

1. பின்வரும் சாரியை வழக்குகள் பிற்கால மொழியில் இடம்பெற வில்லை எல்லா நம்மையும், எல்லீர் நும்மையும், எல்லார் தம்மையும் (தொ. எ. 189-191)

அவையற்றை (தொ. எ 122)

மழையத்து நனைந்தான், வெயிலத்துச் சென்றான் போன்றன (தொ. எ. 228, 241, 242, 305, 377, 402)

பரணியாற் கொண்டான், கேட்டையாற் கொண்டான் போன்றன (தொ. எ. 247, 286, 331)

ஒன் என்னும் சாரியையின் (தொ. எ. 119) முழுவடிவு.

2. தொல்காப்பியனார் ‘சுட்டு முதலாகிய இகர இறுதியும் எகர முதல் வினாவின் இகர இறுதியும்’ (தொ. எ. 159) எனக் குறிப்பிடுவதன் வாயிலாக அதோளி, இதோளி, உதோளி, எதோளி என்பன ஆகிய சொல் வழக்கங்களுக்கு இடந்தந்துள்ளார். இவை பிற்கால மொழியில் வழங்கியமைக்குச் சான்றுகள் இல்லை.

3. பின்வரும் சொல் வழக்குகள் தொல்காப்பியத்தில் மட்டுமே சுட்டபபட்டுள்ளன.

அழன், புழன் (தொ. எ. 193,354) என்பன.
தான், பேன் என்னும் இய்ற்பெயர்கள் (தொ. எ. 351)
பெண்மகன் (தொ. சொ. 163)

4. து, று என்பன தன்மை ஒருமை விகுதிகளாகப் பிற்கால மொழியில் காணப்படவில்லை. (தொ. சொ. 203)

5. செய்ம்மன (தொ சொ. 1,222) வாய்பாட்டுச் சொல் தொல்காப்பியத்தில் மட்டுமே கூறப்பட்டு வழங்குகின்ற ஒன்று.[4]

6 மியா (தொ சொ. 274), போ, யா (தொ. சொ. 279), ஔ (தொ. சொ. 281) போன்ற இடைச் சொற்கள், ஒன்ற, ஒட்ட, கள்ள, காய்ப்ப, பொருஉ, மாற்ற, வியப்ப, விழைய, வீழ, வெல்ல போன்ற உவம உருபுகள் (தொ. பொ. 286 291), கெடவரல் (தொ. சொ 319), உறப்பு (தொ. சொ 347) துயவு (தொ. சொ. 368) போன்ற உரிச்சொற்கள் ஆகியன பற்றிய செய்திகள் தொல்காப்பியத்தில் மட்டுமே அறியக் கிடக்கின்றன[5]

ஆ. வரையறை விஞ்சல்

தொல்காப்பியத்தில் குறிப்பிட்ட எல்லைக்குரியனவாக வரையறுக்கப்பட்டுள்ள சில இலக்கண வழக்குகள் காலப் போக்கில் அவ்வரையறையைக் கடந்து நிற்கின்றமையையும் மொழிவழக்கில் காணமுடிகிறது.

1. தொல்காப்பியனார் 'கள்' என்னும் விகுதி அஃறிணைப் பன்மை உணர்த்தவே வரும் என்கின்றார். அஃறிணைப் பன்மைக்கும் அது கட்டாயம் வரவேண்டும் என்றில்லை (தொ. சொ. 169, 171). சங்க இலக்கியத்திலேயே உயர்திணைச் சொற்கள் சில 'கள்' என்னும் பன்மை விகுதியுடன் அமைதலைக் காணலாம்.

மற்றையவர்கள் (திருக்குறள், 263) அரசர்கள் (கலி. 25)
பூரியர்கள் (திருக்குறள், 919) கேளிர்கள் (கலி. 149)
ஐவர்கள் (கலி. 26)

காலப்போக்கில் இவ்விகுதி உயர்திணைப் பெயர்களில் மட்டுமின்றி, சுட்டும் பெயர்களிலும் உயர்திணை வினைகளிலும் வருதலைக் காணலாம். எ.டு: அவர்கள், இவர்கள், வந்தார்கள், கண்டார்கள்.

2. தொல்காப்பியனார் 'ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும் ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும் வழக்கினாகிய உயர்சொற்கிளவி இலக்கணமருங்கில் சொல்லாறல்ல' (தொ. சொ. 27) என்று கூறுகின்றார். ஆனால் சங்க இலக்கியத்திலும் பிற்கால இலக்கியங்களிலும் ஒருவரைக் கூறும் பன்மைக்கிளவி இலக்கண வழக்கிற்கு ஏற்புடையதாக வழங்கல் ஆயிற்று.

கொடியர் அல்லர் எங்குன்றுகெழு நாடர் (குறு. 87)
ஊரீர் போலச் சுரத்திடை இருந்தனிர் (புறம். 141)

கொடியர், ஊரீர் என்பன ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவிகள்.

3. தொல்காப்பிய நூற்பாக்களின் அடிப்படையில் ஓர், ஈர், மூ முதலிய வடிவங்கள் உயிர் முதல் சொற்களுக்கு முன்னும் ஒரு, இரு மு போல்வன மெய்ம்முதல் சொற்களுக்கு முன்னும் வருதல் வேண்டும். (தொ. எ. 437). ஆனால் இந்நிலை சங்க இலக்கியத்திலும் பிற்கால வழக்குகளிலும் மாற்றம் அடைந்துவிட்டது.

எ - டு, ஓர் சொல் (கலி. 105), ஓர் வண்ணம் (புறம். 152)

4 மக என்னும் சொல் அத்துச்சாரியை ஏற்றலையும் புளி என்னும் சொல் இன் சாரியை ஏற்றலையும் தொல்காப்பியனார் குறிப்பிடவில்லை. ஆனால் சங்க இலக்கியத்தில் மக அத்துடனும் புளி இன்னுடனும் வருதலைக் காணலாம்.

எ-டு, மகத்துக்கை (புறம். 164), புளியின் காய் (நற். 374)

5. தொல்காப்பியனார் வியங்கோள் வினைமுற்று முன்னிலை, தன்மையில் மன்னாது தொ. சொ. 226) என்கின்றார். ஆனால் சங்க இலக்கியத்திலும் பிற்காலத்திலும் வியங்கோள் வினைமுற்று தன்மை, முன்னிலையிலும் வருதலைக் காணலாம்.

எ-டு:- காண்க யாம் (புறம். 166), வாழியர் யான் (புறம். 365)
நீ வாழியர் (புறம். 137), செய்தேன் ஆகுக (புறம். 71)

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

தமிழ்ப் பொழில் உள்ளுறை அடங்கல்

துணர் : ருஅ (இரத்தாட்சி ஆண்டு) மலர்கள் : க-கஉ

தொகுத்தோர் : மா. சற்குணம்,

எண்	கட்டுரையும், ஆசிரியரும்,	இதழ்	பக்கம்
1.	அரசியலில் ஒரு புரட்சி-அண்ணா —சி. கோ. தெய்வநாயம்	8	374
2	அவிட்டமும் சதயமும் ஆவணியும் ஐப்பசியும் — இல. தியாகராஜன்	3	83
3.	அறத்தொடு நிலை தமிழ்நாகரிகத்தின் தனிக்கூறு — இராம. இராமமூர்த்தி	10	480
4.	அறிவியல் பண்ணை —தமிழ்ப் பல்கலைக் கழகம்	5	259
5.	ஆய்வுக்களத்தில் அந்தப்புரம் — ஏ. என். பெருமாள்	6	321
6	ஆஸ்மா என்ற ஈளை நோய் சு. நரேந்திரன்	4	228
7.	இராசராச சோழன் விழா — பதிப்பாசிரியர் குழு	3	1
8.	இராசராசன் காலத்து அளவைகள் —சொ. சாந்தலிங்கம்	3	63
9.	இராசராசன் கீர்த்தி —க. இராமையன்	3	77
10.	இராசராசனின் சமயப் பொறை —அ. தட்சிணாமூர்த்தி	3	80
11.	இராசராசனின் புதுமைப் படைப்புகள் —குடவாயில் பாலசுப்ரமணியன்	3	35
12.	இராசராசனின் மெய்க்கீர்த்தி —செ. இராசு	3	72
13.	இராசராசனும் கருவூர்த் தேவரும் —மு. சண்முகம் பிள்ளை	3	15
14.	இராசராசனும் கோயில் ஆய்வும் —கி. ஸ்ரீதரன்	3	32
15.	இராசர்ராசனும் திருமுறைகளும் —க வெள்ளைவாரணனார்	3	9
16.	இலக்கிய நோக்கில் இராசராசன் —கி. கோதண்டபாணி	3	39

17.	இறை வணக்கம் சரளா ராசகோபாலன்	9, 10	461, 477
18.	இன்பியல் நெறியே தமிழர் நெறி — கி. கோதண்டபாணி	9	417
19.	உரைப்பா அல்லது புதுப்பா — திருத்துறைக்கிழார்	9	458
20.	ஊதியமும் நுகர்பொருள்களின் விலை நிலையும் - 1000 ஆண்டு ஒப்பீடு — த. பத்மநாபன்	3	53
21.	ஏற்றப்பாடல்கள் - ஓர் திறனாய்வு — சு. அழகேசன்	12	561
22	உலோகமாதேவீஸ்வரம் — நடன. காசிநாதன்	3	58
23.	கண்ணன் பாட்டு - 'கண்ணன் என் காதலி' — கே. சோமசுந்தரம்	1, 2	46, 69
24.	கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர் வரவேற்புரை	1	11
25.	கரந்தைத் தமிழ்ச்சங்கச் செப்பேடுகள் புலனாக்கும் - இராராசசோழனின் பேராற்றல்கள் — சி. கோ. தெய்வநாயகம்	3	27
26.	கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோவடிகள் இலக்கியக்கழக 46 ஆம் ஆண்டுத்தொடக்க விழா	8	403
27.	கல்வெட்டியல் அறிஞர்கள் — பொன். முனியப்பன்	2	85
28.	கலித்தொகையில் உவமைகள் மோ. தமிம்மாறன்	8, 9	406, 441
29.	கலை கூறும் கற்பனை — இரா. குழந்தைவேலு	10	486
30.	கள்ளொடு சிவணும் அவ்வியற்பெயர் — ஏ. ஆதித்தன்	4	217
31.	கற்பனையால் ஆம் கட்டு — மொ. அ. துரை அரங்கசாமி	6, 7	298, 353
32.	கனலும் அனலும் — இ. ஆளவந்தார்	12	572
33.	காண்டேகரின் சமுதாயச் சிந்தனைகள் — க. அவ்வை	9	435
34.	குயில் பாடும் பாட்டு — கே. சோமசுந்தரம்	4	209
35.	குறிப்பு வினை — ஏ. ஆதித்தன்	2	65

36.	கோழியூர்க் கோவலர் — இரா. கலைக்கோவன்	7	347
37.	சிவபாதசேகரன் இராசராச சோழன் — கோ. பஞ்சாபகேசன்	3	93
38.	சோழபுரத்துக் கோயில்கள் — இரா. கலைக்கோவன்	1	29
39.	சோழர் கால நாணயங்கள் — இராம. இராமமூர்த்தி	3	95
40.	தஞ்சைப் பெரிய கோவில்-அளவுகோல் — வே. இராமன்	3	3
41.	தஞ்சைப் பெரிய கோவில் சிற்பங்கள் — சி. கோவிந்தராசனார்	3	67
42.	தமிழ் ஆங்கில மொழிகளில் பெயரெச்சத் தொடர்கள் — வீ. ரேணுகாதேவி	5	261
43.	தமிழ் ஆங்கில வினா வகைகள் ஓர் ஒப்பீடு — S. ரேணுகாதேவி	6, 7	314, 339
44.	தமிழ் இலக்கியத்தில் உரிமை வழக்கு — இராம. சுப்பிரமணியன்	6	306
45.	தமிழ்த்தாய் திருப்பள்ளி எழுச்சி — புலியூர்க் கேசிகன்	2	82
46.	தமிழர் பண்பாட்டில் தூவுதல் — இராஜ். பவுன் துரை	1	37
47.	தமிழில் பின்னிணைகள் — மோ. இசரயேல்	4	222
48.	திராவிட மொழிகளில் காலமும் எதிர்மறையும் — ஏ. ஆதித்தன்	8	369
49.	திராவிட மொழிகளின் தொல்லகராதிகள் — மா சற்குணம்	12	595
50	திருக்கற்றளிப் பரமேசுவரர் கோயில் கல்வெட்டுகள் — இரா. கலைக்கோவன்	3, 4	8,208
51.	தேசிய நூலகத் தமிழ்ச் சுவடிகள் — இ. சுந்தரமூர்த்தி	11, 12	542, 570
52.	தொண்டில் திளைத்த தூயவர் சுவைட்சர் — ப. க. பொன்னுசாமி	11	532
53.	தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் - காண்டிகை உரை — ச. பாலசுந்தரம்	8,9,10, 11, 12	385, 427 495, 516, 574
54.	நவில் தொறும் நூல் நயம் — அமுத. இளவழகன்	2	95

55.	நாவலர் நாட்டார் ஐயாவின் நலமிகு கற்பிக்கும் திறன் ந. ரா, முருகவேள்	12	591
56.	நூற்றாண்டு விழா நிகழ்ச்சி (தமிழவேள், நாவலர்) — தமிழ்ப்பித்தன்	1	2
57.	பல்லவர்கால இலக்கியங்களில் சமுதாயம் – பா. மதிவாணன்	5, 6	275, 292
58.	பழுநிய மொழி — பா. இறையரசன்	8	381
59.	பாட்டியல் கூறும் கணப் பொருத்தம் பைந்தமிழுக்குப் பொருந்துமா? அடிகளாசிரியர்	4	201
60.	பெரிய குளத்துக் கல்வெட்டில் வரலாற்று வார்ப்புகள் - து. இராசகோபால்	12	604
61.	பெரும்புலவர் சிந்தாமணிச் செல்வர் - சிறுவை. நச்சினார்க்கினியன்	10	465
62.	பேரரசன் இராசரானும் ஈழமும் — க த திருநாவுக்கரசு	3	46
63.	மகாவித்துவான் மே வீ வே மறைவு - மு சண்முகம்பிள்ளை	11	513
64.	மடங்கள் — இராம. சுப்பிரமணியன்	5	241
65.	மலைவாழ் மக்களின் மொழி - கூவிமொழி — மோ. இசரயேல்	7	363
66.	மன்னர்மன்னனும் மாதேவர் கோட்டமும் — ச. பாலசுந்தரம்	3	50
67.	மாமன்னன் இராசராசனும் தேவாரப் பதியங்களும் — த. கோ. பரமசிவம்	3	20
68.	முத்தி நெறி — மொ. அ. துரை அரங்கசாமி	4, 5	231, 247
69.	வ. உ. சி. யின் சிந்தனைகள் — மா. ரா. அரசு	6	281
70.	வரலாறு எழுதுபவர் கருதுக — அடிகளாசிரியர்	9	425
71.	வரலாறுகண்ட உறையூர் — சி. கோவிந்தராசனார்	2	74
72.	வரவேற்புரை – கவியரங்கம் — ச. பாலசுந்தரம்	1	14
73.	வரவேற்பு வாழ்த்து மடல் — கரந்தைத் தமிழ்ச்சங்கத்தார்	2	49
74.	விநாயகப் பெருமான் — பெ. கு. வரதராசன்	1	17

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 001.

தமிழ்நாடு, இந்தியா

தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

1.	Tamil Literature —Prof. M. S. Purnalingam Pillai	உரூ. 85/— U.S.$ 17
2.	மொழி நூல் —மாகறல் கார்த்திகேய முதலியார்	உரூ. 75—
3.	Tamil University Machine Translation System (TUMTS) Co-authors : K. C. Chellamuthu K. Rangan K. Murugesan	Rs. 75/— U.S.$ 15
4.	A Study on the Thanjavur Art Plate —Prof. P. Saravanavel	Rs. 60/— U.S.$ 12
5.	நாமதீப நிகண்டு —கல்லிடைநகர் சிவசுப்பிரமணியக் கவிராயர்	உரூ. 68—
6.	மொழி நூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும் —பேரா கா. சுப்ரமணியப் பிள்ளை	உரூ. 45/—
7.	Indians in South Africa —Prof. K. Nambi Arooran	Rs. 60/— U.S.$ 12

விற்பனைக் கழிவு: அஞ்சல் வழி 25%
நேரில் 30%
அஞ்சல் செலவு தனி
பேராசிரியர் ஆய்வாளர்களுக்கு 40%
விற்பனையாளர்களுக்குப் பெறும்படிகளுக்கு ஏற்ப கழிவு உண்டு.

தொடர்பு கொள்க:- பதிப்புத்துறை இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

கரந்தைத் தமிழ்ச் சங்கவெளியீடுகள்

யாழ் நூல் — விபுலானந்த அடிகள்	ரூ 50	00
கட்டுரைப் பொழில் (சங்க மணிவிழா மலர்)	ரூ. 30	00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ. 60	00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டு விழா நினைவுச் சிறப்பிதழ்	ரூ. 6	00
கபிலர் – நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ 4	00
நக்கீரர் - நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ. 3	00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு - பா வே. மாணிக்க நாயக்கர்	ரூ. 2	00
கவியரசு நினைவு மலர்	ரூ. 1	00
தமிழரசி குறவஞ்சி	ரூ. 0	62
சிவமும் செந்தமிழும்–பாவலர் ச. பாலசுந்தரம்	ரூ. 0	25

பிற வெளியீடுகள் :

கரந்தைக் கோவை (அகப்பொருட் கோவை நூல்) பேராசிரியர் ச. பாலசுந்தரம்	7	50
கலைக்கூத்தன் கவிதைகள்	ரூ. 6	00

நூல்கட்குக் கழிவு 20% தரப்பெறும் அஞ்சற் செலவு தனி. நூல்கள் வேண்டுவோர் கீழ்வரும் முகவரிக்கு எழுதுக.

தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613002.

பதிப்பாசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-2.

பேராசிரியர். க. வெள்ளைவாரணன்,
142, கனகசபை நகர், சிதம்பரம்.

சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி., பி. எல்.,
இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை.

டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பிஎச். டி.,
தலைவர், தமிழ்த்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்.

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம். லிட், பிஎச். டி.,
தலைவர், தமிழ் மொழித் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர். பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பேராசிரியர் சி. கோவிந்தராசன்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் ஆ. பாலன், எம். ஏ.,
துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

புலவர். மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர்,
உமா மகேசுவரா மேனிலைப் பள்ளி, தஞ்சாவூர்-2.

திரு. பா. மதிவாணன், எம். ஏ., எம் பில்.,
துணைப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பதிப்பாசிரியர் :
பேராசிரியர் ச. பாலசுந்தரம்

Regd. No. TN/TJ/17.

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு ....

....

....

....

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு		வெளிநாடு	
தனியிதழ்	ரூ.	2	50	3	00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	25	00	60	00
வாழ் நாள் கட்டணம்	ரூ.	250	00	600	00

வெளியிடுபவர் : கரந்தை தமிழ்ச் சங்கம்

அச்சிடுபவர் : ஜெமினி அச்சகம்